விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 19 திங்கட்கிழமை (01.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

## 37 ஆயிரத்து 825 பேருக்கு
## கடந்த 3 நாட்களில் தடுப்பூசி ஏற்றப்பட்டது

(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை நூற்றுக் 19

## இலங்கையின் நிலைப்பாட்டை ஐ.நாவில் வெளிப்படுத்த புதிய பிரேரணையே தேவை

### கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை இலங்கை அரசாங்கம் களைவதற்கு, போர் நிறைவின் பின்னரான படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள் முதல் ஆணைக்குழுக்களின் 19

## வடக்கில் நேற்று 1530 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோவிட் - 19 தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டத்தின் இரண்டாவது நாளாகிய நேற்றைய 19

## கொரோனாவால் 3 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் 19

### இலக்கு வைக்கப்படும் இந்து ஆலயங்கள்

# உருத்திரபுரத்தில் உள்ள சிவனுக்கும் ஆபத்து!


## அகழ்வாராய்ச்சியை முன்னெடுக்க தொல்லியல் திணைக்களம் நடவடிக்கை

*(கிளிநொச்சி)*

*கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவன் கோயில் (உருத்திரபுரீஸ்வரர்) ஆலய வளாகத்தில் தொல்லியல் அடையாளங்கள் உள்ளதாகக்கூறி அகழ்வுப் பணிகளை நடத்த தொல்லியல் திணைக்களம் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.*

*(19ஆம் பக்கம் பார்க்க)*





## விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் நகர்ப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள் 19

### அமைச்சர் விதுர தலைமையில்
## குருந்தூர்மலை தொடர்பில் இன்று கலந்துரையாடல்

(கொழும்பு)

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் இடம்பெறும் அகழ்வுப் பணிகளில் யாழ்.பல்கலைக்கழக அகழ்வு ஆராய்ச்சி பிரிவினரையும் உள்ளீர்ப் 19

## நேற்று மட்டும் 837 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் 837 பேருக்கு கோவிட் - 19 தொற்றுறுதி 19

## இராணுவம், பொலிஸ் பாதுகாப்புடன் குருந்தூர்மலையை பார்வையிட்ட தேரர்கள்



(முல்லைத்தீவு)

முலலைத்தீவு மாவட்டத்தில் அகழ்வராய்சசி பணிகள் முன்னெடுக்கப்படும் குருந்தூர்மலைக்கு பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட பௌத்த மதகுருமார்கள் படை அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் 19

### அரசியல் பழிவாங்கலை ஆராய
## புதிய ஆணைக்குழு
### ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 முதல் 2019 நவம்பர் 16 19

### தீக்காயத்துக்குள்ளான
## இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று 19

## வடக்கில் நேற்றும் மூவருக்கு கொரோனாத் தொற்று

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 245 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வடக்கு மாகாணத்தில் மூவருக்கும் தனிமைப்படுத்தல் நிலையங்களைச் சேர்ந்த 12 பேருக்கும் தொற்று உறுதி . செய்யப்பட் 19

### பொத்துவில் முதல் பொலிகண்டிவரை
## அகிம்சைப் போராட்டத்துக்கு அனைத்துக் கட்சிகளும் முழுமையான ஆதரவு

7ஆம் பக்கம் பார்க்க

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்ய முடியாது

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் உடனடியாக எந்த திருத்தத்தையும் செய்ய முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் குறித்த கோரிக்கையை விடுத்த நிலையில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே உடனடியாக அதில் மாற்றங்களை மேற்கொள்ள இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் பரிசீலிக்கப்படும் எனவும் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (ஞா)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# சாவகச்சேரியில் விபத்து; வைத்தியர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வைத்தியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த வைத்தியர் வைத்தியசாலையில் இருந்து புறப்பட்டு ஏ9 வீதியை மோட்டார் சைக்கிளில் கடக்க முற்பட்ட வேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிக் காயப்படுத்தியதுள்ளது.

இதன் போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் 43 வயதான ஶ்ரீரங்கராஜன் என்ற வைத்தியரே கால் முறிவுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30)

# சுயதனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை

## மீண்டும் எச்சரிக்கிறார் அஜித் ரோஹண

(கொழும்பு)

சுயதனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் தொடர்பில் கண்காணிப்பதற்காக பொலிஸார் சிவில் உடையில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் போது சுயதனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்படும் நபர்கள் இனங்காணப்பட்டால், அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்கள் சட்டவிதிகளை முறையாக பின்பற்றுவதில்லை என தெரியவந்துள்ளது. சுயதனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் வெளிபிரதேசங்களுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படாத போதிலும், சிலர் அதற்கு முரணாக வெளிபிரதேசங்களுக்கு செல்வது தெரியவந்துள்ளது. அதனால் இவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக பொலிஸார் சிவில் உடையில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது சட்டவிதிகளுக்கு புறம்பாக வெளிபிரதேசங்களுக்கு செல்லும் நபர்கள் மற்றும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களின் இல்லங்களுக்கு செல்லும் வெளிநபர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஞா)


காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும்

சற்குரு ஶ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 174 ஆவது இசை ஆராதனை விழா

அழைப்பு



இடம் - கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் - 02.02.2021 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணி

நிகழ்ச்சி நிரல்

- தொடக்கவுரை : மிருதங்க வித்துவான் நல்லை க. கண்ணதாஸ் அவர்கள் (இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)
- ஈழத்துப் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள் வழங்கும் " மங்கள இசை " (1 மணித்தியாலம்)
- ஈழத்துப் பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள், பக்க வாத்திய கலைஞர்கள் வழங்கும் " பஞ்சரத்தின கீர்த்தனைகள் " (1 மணித்தியாலம் )
- தியாகராஜ சுவாமிகள் அருளிய கீர்த்தனைகளில் விரும்பிய கலைஞர்கள் ஒவ்வொரு கீர்த்தனைகள் வீதம் இசைத்தல் (30 நிமிடம்)

(C-1325)

குறிப்பு

- நிகழ்விற்கான இலவச போக்குவரத்துச் சேவை யாழ். கிளையிலிருந்து பி.ப 3.15 மணிக்கு ஆரம்பமாகும். (இல. 426, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம், யாழ். வண்ணை சிவன் கோவில் அருகாமை )
- நிகழ்வு சுகாதார நடைமுறைக்கு அமைவாக நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்.


# அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆணைக்குழுவை வரவேற்கிறேன்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(வவுனியா)

அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆணைக்குழுவை வரவேற்பதாக கடற்தொழில் நீரியல் வழங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் சமுதாய வேலைத் திட்டத்தின் கீழ் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் வீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்றையதினம் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக புதிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டமை நன்மையான விடயமே. ஆட்சி மாறியுள்ளமையால் நடந்த உண்மைகளை அறிவதற்காக அவ்வாறான குழுக்களை அமைத்து தகவல்களை பெற்றுக் கொள்வதுண்டு. அந்தவகையில் அது வரவேற்கக்கூடிய விடயமே.

அத்துடன் இந்தியாவுடனும் நாங்கள் நட்புறவை பேண வேண்டும். அந்தவகையில் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங் குவதற்கு உத்தேசித்துள்ளமையும் நல்ல விடயமே. சட்ட ரீதியான பிரச்சினைகள் இருப் பதால் 51 வீதத்தை இலங்கை அரசும் வேறு முதலீட்டாளர் களிற்கு 49 வீதத்தையும் வழங்கினாலேயே அது அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்றவகையில் அது செய்யப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பூ சிக்காகவே அதனை வழங்குவதாக கூறுகின்றமை எதிர் கட்சி அரசியல் வாதிகள் வழமையாக கதைக்கும் விடயமே என்றார். (ஞா-299)


45 ஆவது நாள் நினைவும் நன்றி நவிலலும்



தர்மலிங்கம் விசாகன்

பிறப்பு – 05.02.1983 இறப்பு – 19.12.2020

19.12.2020 அன்று காலமான தர்மலிங்கம் விசாகன் அவர்களின் இறுதிச் சடங்கில் நேரடியாக கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும் முகநூலினூடாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வழங்கியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-1320)

"வதனி இல்லம்"
வதிரி

குடும்பத்தினர்.
077 103 2819



மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் நிரஞ்சன்



பிறப்பு : 27.09.1979
இறப்பு : 31.01.2021

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் நிரஞ்சன் நேற்று (31.01.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நீலாதேவி (பவளம்) தம்பதியரின் அன்பு மகனும் மயூரன், சுலக்சனா, தர்மினி, தர்சிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரேமச்சந்திரன், செந்தூரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.02.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (5489)

அளவெட்டி வடக்கு.
சாத்தார் கலட்டி, அளவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்

# பெப்ரவரி மாதம் இலங்கை வருகிறார் இம்ரான் கான்



(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தத் தகவலை வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே உறுதிப்படுத்தியுள்ளார். இந்த விஜயத்தின் மூலம் கடந்த ஆண்டு முதல் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு விஜயம் செய்த முதல் அரசாங்கத் தலைவராக அவர் இருப்பார்.


இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் கொழும்புக்கான மூன்று நாள் விஜயத்தின் ஒரு மாதத்திற்குப் பிறகு இம்ரான் கானின் திட்டமிட்ட விஜயம் அமையவுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த 2016 ஆம்ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்திருந்தார்.

யுத்த காலத்தில் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கிய நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்றாகும். கடந்த காலத்தில் ஐ.நா.மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு ஆதரவாக பாகிஸ்தானும் முக்கிய பங்கு வகித்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவை ஐக்கிய நாடுகள் சபை நிராகரிக்க வேண்டும்

## சுமந்திரன் வலியுறுத்து



**(கொழும்பு) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள மூவர் அடங்கிய மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான ஆணைக்குழுவை, ஐக்கிய நாடுகள் சபை நிராகரிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

தமிழரசுக்கட்சியின் அரசியல் குழு கூட்டம் வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன் மேலும் கூறியுள்ளதாவது, "வடகிழக்கில் எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் தொடர்பாக நாம் உரையாடியுள்ளோம்.

தொல்லியல் திணைக்களம் மகாவலி, வனஇலாகா போன்ற திணைக்களங்கள் எமது மக்களின் நிலங்களை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகிறது. வழிபாட்டு தலங்களை மாற்றியமைக்கும் மோசமான செயற்பாட்டில் தொல்லியல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இவை தொடர்பாக நாம் ஆராய்ந்துள்ளோம். இவற்றிற்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் போராட்டம் ஒன்றை சிவில் அமைப்புகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்கு எமது கட்சியும் ஆதரவு வழங்கும்.

இவ்வாறான விடயங்களில் எமது மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் கொடுக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பிற்கு இருக்கிறது. இதற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கிறோம்.

ஜெனிவா விடயத்தில் தமிழ் தேசியக்கட்சிகள் ஒரே நிலைப்பாட்டில் இருந்து எமது கோரிக்கைகளை 47 உறுப்புநாடுகளிற்கும் அனுப்பியிருப்பது சந்தோசமான விடயம்.

புதிய அரசாங்கம் ஒரு நிபுணர் குழுவை உருவாக்கியிருக்கிறது. அதற்கு எமது யோசனைகளையும் நாம் அனுப்பியிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வில்லாமல் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவது அர்த்தமற்றது என்பதை தெளிவாக சொல்லியிருக்கிறோம்.

அதனைத் தீர்ப்பதற்கான பல வரைபுகள் பல தடவைகள் செய்யப்பட்ட நிலையிலேயே இருப்பதை நினைவுபடுத்தியுள்ளோம்.

அந்தக் குழு சந்திப்பதற்கு ஒழுங்கு செய்துள்ளது. எனவே நேரடியாக சந்திக்கும் போதும் எமது நிலைப்பாடு பற்றிக் கூறுவோம்.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய ஆணைக்குழுவால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. அது ஒரு கேலிக்கூத்தான விடயம்.

இது சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு கண்துடைப்பு நாடகம். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் நாம் எவ்வளவோ தூரம் முன்னேறலாம். அவற்றை ஆராய்வதற்கு இன்னொரு ஆணைக்குழு தேவையில்லை. இதை மனித உரிமை பேரவை முற்றுமுழுதாக நிராகரிக்கும் என்று நம்புகிறோம்.

இலங்கையின் சுதந்திர தினத்தை நாம் தொடர்ந்து புறக்கணித்தே வந்திருக்கிறோம். கடந்த அரசாங்கம் சிறு நல்லெண்ண சமிக்ஞைகளை காட்டியபோது நாமும் அதில் கலந்துகொண்டோம்.

எனினும் அந்த அரசாங்கமும் எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்தே செயற்பட்டிருந்தது.

எனவே தொடர்ந்து நாம் சுதந்திர தினத்தைப் புறக்கணிப்போம்" என சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (நி-250)

# இலங்கை விவகாரத்தில் நடுநிலை தவறியது ஐ.நா.

## வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)


இலங்கை விவகாரத்தில் மனித உரிமை பேரவை நடுநிலைத்தன்மையை பேணவில்லை என நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை நட்புறவுடன் செயற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உள்ள பொறிமுறையின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் மனித



உரிமைபேரவையினையாள வகுக்கப்பட்ட திட்டங்களை 2015 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த நல்லாட்சி அரசாங்கம் செயற்படுத்தவில்லை.

மனித உரிமை பேரவை விவகாரம் கூட அரசியல் பழி வாங்கலுக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. 30/1 பிரேரணைக்கு இணையனுசரணை வழங்குவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அப்போதைய அரச தலைவருக்கும் பாராளுமன்றுக்கும் அறிவிக்காமல் இணக்கம் தெரிவித்தமை தேசத்துரோகச் செயற்பாடாகவே கருத வேண்டும்.

அந்தப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அரசியலமைப்பிற்கு முரணானது. 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற மனித உரிமை கூட்டத் தொடரின் போது அந்தப் பிரேரணையில் இருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகியது.

இந்த நிலையில், பெப்ரவரியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. எனினும், இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை இலங்கையின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இம்முறை திருத்தியமைக்கப்படும். உள்ளக பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்று ஒரு தரப்பினர் இலாபமடைகிறார்கள். இதனால் சாதாரண தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப் பெறவில்லை" என அவர்மேலும் தெரிவித்தார். (நி-4)

# 'அபயம்' மருத்துவ நிலையத்தில் இலவச வைத்திய ஆலோசனை

## பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கூழாவடியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் பெண் நோயியல் சிறப்பு சிகிச்சைநிபுணரும் குழந்தைப்பேறு சிறப்பு சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி என்.சரவணபவ இலவசமாக வைத்திய ஆலோசனை வழங்கிவருகின்றார்.

மேற்குறிப்பிட்ட சிகிச்சை தேவையுடையோர் அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் பதிவுகளைமேற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பதிவுகளை திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு 021225 6005 அல்லது 077 585 0372 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அபயம் மருத்துவ சேவை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி-4)

# 'அபயம்' மருத்துவ சேவை மயிலிட்டியிலும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி கிராம சங்க வீதியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்தில் (சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம்) இலவசமாக மருத்துவ சேவையானது கடந்த வியாழக் கிழமையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒவ்வொரு வாரமும் வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரை தனது சேவையினை வழங்கி வருகின்றனர். மேற்குறிப்பிட்ட சேவையினை மயிலிட்டி வாழ் மக்களுக்காகவும் அதனைச் சார்ந்த கிராம மக்களின் நலன் கருதியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



வைத்தியசாலையிலிருந்து வெளியேறியபோது கங்குலி

# கங்குலி உடல் நலம்

## தொடர் ஓய்விலிருக்க வைத்தியர்கள் அறிவுறுத்து

இரண்டாவது முறை யாக 'ஆன் ஜியோ பிளாஸ்டி' சிகிச்சை செய்த கங்குலி, மருத்துவ மனையில் இருந்து 'டிஸ்சார்ஜ்' செய் யப்பட்டார்.

இந்திய அணியின் முன் னாள் அணித் தலைவர் செள ரவ் கங்குலி (வயது-48). கடந்த 2019 முதல் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) தலைவராக உள்ளார்.

கடந்த ஜனவரி முதல் வாரத்தில் இவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. இரு தயத்துக்கு செல்லும் ரத்தக் குழாய்களில் மூன்று இடங்களில் அடைப்பு இருந்தது. உடனடியாக ஒரு அடைப்பு மட்டும் சரி செய்யப் பட்டு வீடு திரும்பினார்.

மூன்று வாரங்களுக்கு பின், கங்குலிக்கு மீண்டும் லேசான நெஞ்சுவலி ஏற்பட, கொல்கத்தாவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டார்.

மீண்டும் 'ஆன்ஜியோ பிளாஸ்டி' சிகிச்சை செய்யப்பட்ட இவருக்கு, மீதமி ருந்த இரு அடைப்புகளை சரிசெய்ய கூடுதலாக இரு 'ஸ்டென்ட்' பொருத்தப்பட்டன.

சிகிச்சைக்கு பின், அவரது ரத்த அழுத்தம், இருதயத் துடிப்பு என அனைத்தும் சீராக இருந்தன. இவர், நலமுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து மருத்துவமனையில் இருந்து கங்குலி 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட் டார். அடுத்த சில வாரங்கள் முழு ஓய்வில் இருக்கும்படி அறிவுறுத் தப்பட்டுள்ளார்.

# இந்தியாவில் நடக்குமா ஐ.பி.எல்?

## பி.சி.சி.ஐ., விரைவில் முடிவு

ஐ.பி.எல்., தொடரின் 14ஆவது சீசனை இந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ., ஏற்பாடுகள் செய்கின்றது.

இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) சார்பில் ஐ.பி.எல்., 'ரி20' தொடர் நடத்தப்படுகிறது.

13ஆவது சீசன் கொரோனா காரணமாக நீண்ட தாமதத்துக்குப் பின், பல்வேறு சிக்கல்களுக்கு இடையே, ஐக்கிய அரபு எமிரேட்ஷில் (யு.ஏ.இ.,) வெற்றிகரமாக நடத்தப் பட்டது.

ஆனால் 14ஆவது சீசன் முழுவதையும் இந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ., முயற்சித்து வருகிறது.

14ஆவது சீசன் போட்டிகளை மும்பை வான்கடே, பிரபோர்ன், டி.ஒய்.பாட்டில் மைதானம். நவி மும்பை மற்றும் மஹாராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானங்களில் நடத்துவர் எனத் தெரிகிறது.

'பிளே ஒப்' சுற்று போட்டிகள் உலகின் மிகப் பெரிய அகமதாபாத் மைதானத்தில் நடக்கும். இங்கு 1,14,000 ரசிகர்கள் அமர்ந்து போட்டியை கண்டுகளிக்கலாம்.

**போட்டி எப்போது?**

இதுகுறித்து பி.சி.சி.ஐ., தரப் பில் வெளியான செய்தியில், 'ஐ.பி.எல்., தொடரை எங்கு நடத்துவது என்ற இறுதி முடிவை, கட்டுப்பாட்டுக் குழு எடுக்கும். இருப்பினும் 2021ல் நடக்கும் 14ஆவது சீசன், வரும் ஏப்., 11இல் ஆரம்பமாகும். இங்கிலாந்து தொடர் வரும் மார்ச் மாதம் முடிகிறது.

இதன் பின் இந்திய அணி வீரர்களுக்கு சற்று ஓய்வு கிடைக்கும். அடுத்து ஏப்., 11ல் தொடர் ஆரம்பமாகி, ஜூன் 5 அல்லது 6ஆம் திகதி முடியும்,' என தெரிவிக் கப்பட்டுள்ளது.

### இந்தியத் தொடருக்காக

# சென்னையில் இங்கிலாந்து பயிற்சியில் தீவிரம்



பயிற்சியின்போது இங்கிலாந்து வீரர் ஜ்ரோக்ஸ்

சென்னை டெஸ்ட் போட்டிக்கு தயாராகும் வகையில் ஸ்ரோக்ஸ், ஆர்ச்சர் உள்ளிட்ட இங்கிலாந்து வீரர்கள் பயிற்சியை ஆரம்பித்தனர்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகள் வரும் பெப். 5, 13இல் சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கின்றன.

இதில் பங்கேற்க 'சகலதுறை வீரர்' பென் ஸ்ரோக்ஸ், வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா மாற்று ரோரி ஆர்ச்சர், ஆரம்ப வீரர் பேர்ன்ஸ், உதவியாளர்கள் உள்ளிட்ட 15 பேர் கொண்ட இங்கிலாந்து அணியினர் கடந்த ஜன. 24ல் சென்னை வந்தனர். இவர்கள், சென்னையில் உள்ள ஹோட்டலில் 6 நாட்கள் தனிமைப் படுத்தப்பட்டனர். அப்போது எடுக்கப்பட்ட 3 'பி.சி.ஆர்., கோவிட்-19' பரிசோதனையிலும் தேறினர்.

இதனையடுத்து ஸ்ரோக்ஸ், ஆர்ச்சர், பேர்ன்ஸ் என, மூவரும் சேப்பாக்கம் மைதானத்தில் பயிற்சியை ஆரம்பித்தனர். அடுத்த மூன்று நாட்களுக்கு, தினமும் 2 மணி நேரம் மட்டும் பயிற்சியில் ஈடுபட இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்ற ஜோ ரூட் தலைமையிலான இங்கிலாந்து அணியினர், கடந்த ஜன. 27ல் சென்னை வந்தனர். ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இவர்களுக்கு எடுக்கப்பட்ட 2ஆவது 'பி.சி.ஆர். கோவிட்-19' பரிசோதனையில் அனைவருக்கும் 'நெகடிவ்' என்று முடிவு வந்து ள்ளது.

ஒட்டுமொத்த இங்கிலாந்து வீரர்களும் இணைந்து வரும் பிப். 2 முதல் பயிற்சியில் ஈடுபட உள்ளனர்.



பிக்பாஷ் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரிஸ்பேன் ஹீட் - சிட்னி தண்டர் அணிகளுக்கிடையிலான நொக் அவுட் போட்டியின்போது... இப்போட்டியில் ஹீட் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்யீட்டியது

# ஹோலியின் சவாலை சமாளி

## மொயினின் எதிர்பார்ப்பு என்ன?



மொயின் அலி

"வரும் தொடரில் இந்திய அணித் தலைவர் ஹோலி, எங்களுக்கு மிகப் பெரிய சவாலாக இருப்பார்," என மொயீன் அலி தெரிவித்தார்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. முதல் இரு போட்டிகள் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பெப். 5-9, பெப். 13-17 ல் நடக்கவுள்ளன.

இத்தொடருக்காக இரு அணி வீரர்களும் தற்போது ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தொடர் குறித்து இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சு 'சகல துறை வீரர்' மொயின் அலி கூறியதாவது,

இந்திய அணித் தலைவர் ஹோலி, உலகத்தரம் வாய்ந்த வியக் கத்தக்க வீரர். மற்ற வீரர்களுக்கு எப்போதும் துாண்டுகோலாக இருப்பார். அவுஸ்திரேலிய தொடரில் இந்திய அணி சிறப்பாக செயற்பட்டுள்ளது. இதனால் ஹோலி இன்எனும் கூடுதல் உற்சாகத்து டன் தான் செயல்படுவார். தவிர சமீபத் தில் பெண் குழந்தைக்கு அப்பா ஆன சந்தோஷத்தில் உள்ளார்.

களத்தில் இவரை எப்படி ஆட்டமிழக்கச் செய்வது என்று இன்னும் தெரியவில்லை. ஏனெனில் எனக்குத் தெரிந்து ஹோலி எந்த இடத்திலும் பலவீனமாக இருப்பது இல்லை.

ஆனால் எங்கள் அணி யில் சிறப்பான வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர் என்பதால் நம்பிக்கையுடன் உள்ளோம். ஹோலியை பொறுத்தவரையில் எனக்கு நல்ல நண்பர்.

கிரிக்கெட் குறித்து நாங்கள் கொஞ்சமாகத் தான் பேசியுள்ளோம். மற்றபடி அதிகம் பேசியது இல்லை. மற்றபடி சென்னை டெஸ்டில் அணியில் இடம் பெறுவேனா, இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல.

அணியில் களமிறங்கச் சொன்னால் தயாராக காத்திருக்கிறேன். ஏனெனில் போட்டி களில் என்னால் ஓட்டங்கள் சேர்க்க முடி யும், எதிரணியின் விக்கெட்டுகளை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை இன்னும் உள்ளது. எனக்குள் சின்ன சின்ன லட்சியங்கள் வைத்துள்ளேன்.

தற்போது 181 விக்கெட்டுகள் வீழ்த்திய நான், விரைவில் 200 விக்கெட்டுகள் வீழ்த்த முடியும் என நம்புகிறேன். இதன் பின் மற்றொரு இலக்கு வைத்துக் கொள்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

**ஓட்ட வேகத்தில்...**

ஹோலி குறித்து இங்கிலாந்து அணியின் பட்லர் கூறுகையில் ,"அவுஸ்திரேலிய தொடரில் கடைசி 3 டெஸ்டில்ஹோலிபங்கேற்கவில்லை. இந்த ஓய்வு காரணமாக வரும் தொடரில் தலைமைத்துவ பணியில் சிறப்பாக செயல்பட்டு, அதிக ஓட்டங்கள் குவிக்கும் வேகத்தில் இருப்பார். இதனால் வரும் தொடர் எங்களுக்கு சவாலாக இருப்பது உறுதி," என்றார்.

# தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்க இலங்கை அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் உறுதி

(டில்லி)

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுமென திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலுவிடம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உறுதியளித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும் தி.மு.க. பாராளுமன்றக்குழுத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, இலங்கையில் தமிழர்கள் வாழும் மாகாணங்களை கலைத்துவிட, இலங்கை அரசு முடிவெடுத்துள்ளதை கண்டித்தும் தமிழக மக்களின் கண்டனத்தையும் தெரிவித்து, பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதமொன்றை கடந்த டிசெம்பர் மாதம் அனுப்பியிருந்தார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன், இலங்கை அரசு செய்து கொண்ட இருதரப்பு ஒப்பந்தத்தின்படி ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது சட்டத் திருத்தத்திற்கு எதிராக, இலங்கை அரசு, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களை கலைக்க முடிவு செய்திருப்பது, தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் அலட்சியத்தை காட்டும் துரதிர்ஷ்டமான முடிவாகும் என்பதை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

டி.ஆர்.பாலுவின் கடிதத்திற்கு விரிவான பதிலை எழுதியுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

ஒன்றுபட்ட இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களின் சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கண்ணியத்திற்கான அம்மக்களின் எதிர்பார்ப்புகளை பாதுகாக்க, அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், இலங்கை அரசைத் தொடர்ந்து, இந்திய அரசு வலியுறுத்தி வருகின்றது.

இலங்கை அரசால் உறுதியளிக்கப்பட்ட,13 ஆவது சட்டத் திருத்தத்தின்படி, அதிகாரப் பரவலை உறுதி செய்வதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதும் இலங்கை அரசின் நலன்களை பாதுகாக்க உதவும் என எனது அண்மைய இலங்கை பயணத்தின் போது இலங்கை அரசிடம் கேட்டுக் கொண்டேன் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு




(கொழும்பு)

கொழும்பு - மினுவாங்கொட பிரதான வீதியில் ஏக்கல விமானப்படை தளத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

வான் ஒன்று வீதியை விட்டு விலகி மதிலொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் ரத்தொலுகம, சீதுவ மற்றும் பமுனுகம ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் ராகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (நி-4)

# கனரக லொறி-மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இரு இளைஞர்கள் உயிரிழப்பு




(ஹற்றன்)

நுவரெலியா-பூண்டுலோயா, கம்பளை பிரதான வீதியில் நியங்கந்தர பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில், இராவணாகொடை- கலப்பிட்டியவில் வசிக்கும் சந்தருவன் ரணசிங்க (வயது- 19) மற்றும் என்.ஜீ.தினேஷ் (வயது-19) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

கொத்மலையிலிருந்து பூண்டுலோயா பகுதியை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் பூண்டுலோயா பகுதியிலிருந்து கம்பளை பகுதிக்கு சென்ற கனரக லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக கனரக லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவரை, நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# நாட்டின் இறைமைக்குள் கைவைத்தது தவறு


## ஐ.நா.ஆணையாளரை குற்றம் சாட்டிய வீரசேகர

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நாட்டின் இறைமைக்குள் கைவைப்பதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.**

மேலும் இராணுவ அதிகாரிகளை முக்கிய பதவிகளில் அமர்த்தும் நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அவரது அறிக்கை முற்றிலும் பிழையானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி கூட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை முக்கிய பதவிகளில் நியமித்துள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



கடந்த அரசாங்கத்தின் சார்பாக அமெரிக்காவின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவே தற்போதைய நிலைமைக்கு காரணம் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயங்களில் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த முடிவை எடுப்பார் என்றும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (நி-4)

# கொவிட் சிகிச்சை நிலையத்தில் இருந்து பரீட்சை எழுதும் பல்கலை.மாணவர்கள்



(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற 4 மாணவர்கள் கொவிட் - 19 தொற்றுக்கு இலக்காகியுள்ள நிலையில், தற்போது அவர்கள் பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலை கொவிட் - 19 இடைநிலைப் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவ்வைத்தியசாலையில் இருந்த வண்ணமே தற்போது அவர்கள் பரீட்சையை எழுதுகிறார்கள்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் இறுதி வருட இரண்டாம் தவணைப் பரீட்சை நடைபெற்று வருகிறது. சகல ஒழுங்குகளையும் சுகாதாரத்துறையினர் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

அதனை நாங்கள் சீ.சீ.ரி.வி. கமரா மூலம் கண்காணித்து வருகின்றோம் எனவும் இது பல்கலைக்கழக வரலாற்றிலே இலங்கையில் முதல் தடவை நடைபெறுவதாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே. கெனடி தெரிவித்தார். (நி-4)

# குணமடைந்தோர் எண்ணிக்கை 57 ஆயிரத்தைக் கடந்தது

(கொழும்பு)

நாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேலும் 882 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில், கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 57 ஆயிரத்தை கடந்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 57,159 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சரணாகதியோ- அடிமைத்தனமோ அல்ல எமது பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி இது

# இளைஞர் முன் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத்தில் நம்பிக்கையுடன் இணைந்து பணியாற்றி உங்களது எதிர்காலத்தை வெற்றிகொள்ளுங்கள். அதன் வளர்ச்சிக்காக அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் நான் உறுதுணையாக இருப்பேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.**

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனத்திற்கான நிர்வாகக் குழு அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நானும் இம்மண்ணில் பிறந்து வளர்ந்த ஒருவன். ஆனாலும் அன்றைய கால அரசியல் நிலைமைகள் என்னை வேறு ஒரு திசை நோக்கி அழைத்துச் சென்றுவிட்டது.

அதனால் நாம் திசை திருப்பப்பட்டு அப்போது எமது மக்களுக்கு இருந்த பிரச்சினை க்கு ஆயுதப் போராட்டமே சரியானதென அன்று அதில் இறங்கியிருந்தோம்.

ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக இயக்கங்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள், சகோதர படுகொலைகள் காரணமாக போராட்டம் திசைமாறிவிட்டது.

இங்கு நீங்கள் உங்களது சம்மேளனத்தின் உறுதி மொழியாக ஒற்றுமை, நட்பு, ஒத்துழைப்பு அபிவிருத்தி ஆகிய நான்கு விடயங்களை உள்ளடக்கியுள்ளீர்கள்.

இதில் ஒற்றுமை, நட்பு என்பதை, அதாவது நீங்கள் வாழுகின்ற சமூகத்திற்கிடையே மட்டுமல்ல தேசிய ரீதியிலும் வளர்த்தெடுக்க வேண்டும்.



எமது பிரச்சினைகளுக்கான தீர்வை காண்பதற்கு தேசிய நல்லிணக்கம் அவசியம். அது சரணாகதியோ அடிமைத்தனமோ அல்ல.

பேச்சுவார்தைகளினூடாகவும் புரிந்துணர்வின் ஊடாகவும் எமது பிரச்சினைகளை வெளிப்படுத்தி அந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்டமுடியும் என்பதே உண்மையானது.

அந்தவகையில் நீங்கள் ஒவ்வொருவரும் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் இந்த இளைஞர் மன்றத்தில் இணைந்து அதனூடாக உங்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணமுடியும் என்ற நம்பிக்கையை நான் உங்களிடம் தெரிவிக்கின்றேன்.

அதேபோன்று இந்தச் சம்மேளனத்திடம் அதிகளவான பிரச்சினைகள் உள்ளதாகவும் அதற்கு தீர்வுகளை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் தீர்வுகளை பெற்றுத்தர நான் தயாராகவே இருக்கின்றேன்.

குறிப்பாக உங்களுக்கு நாமல் ராஜபக்ஷ என்ற ஒரு சிறந்த அமைச்சர் உள்ளார். அவர் தமிழ் மக்களின். பிரச்சினைகளை தெளிவாக புரிந்து கொண்டவர்.

அவரும் ஓர் இளைஞராக இருப்பதால் உங்களது பிரச்சினைகளை அறிந்துகொள்ளக் கூடியவராக இருப்பதுடன் ஓர் அறிவார்ந்த, தற்துணிவுள்ள அமைச்சராகவும் அவர் இருப்பதால் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அனைத்துக்கும் இலகுவாக தீர்வுகளை காணமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (5)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அறிவியல் மேதையும் இந்திய முன்னை நாள் ஜனாதிபதியுமான A.P.J அப்துல் கலாம் (2012-01-23) வருகை தந்த தினத்தை நினைவு கூர்ந்து கடந்த 23 ஆம் திகதி மரம் நடுகை நிகழ்வு அதிபர் ஆர் .செந்தில் மாறன் தலைமையில் நடைபெற்றது.

## அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

குப்பிழான் தெற்கு பரிசயப்புலம் நரசிங்கர் வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று திங்கட்கிழமை அலங்காரக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.இவ் உற்சவம்தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது. இவ்வாலய அலங்கார உற்சவ நாட்களில் தினமும் மாலை 6 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வருதலும் இடம்பெறும்.

இவ் உற்சவத்தில் எதிர் வரும் 9 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 10 ஆம் திகதி புதன் கிழமை 108 சங்காபிஷேகமும், தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலகர் தெரிவித்தார். (5-4-18)

## இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமியின் 174 ஆவது பஞ்சரத்தின இசை ஆராதனை இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் செல் வி. பரமேஸ் வரி கணேசகம்பர் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறும். (5-4)



வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட புதிய சந்தைத் தொகுதி மழை காலங்களில் வெள்ளக் காடாக காட்சியளிப்பதாக அண்மையில் வலம்புரி சுட்டிக்காட்டியதை அடுத்து குறித்த புனர்நிர்மானப் பணிகள் நேற்று வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டது.

(படம்-மகாலிங்கம் )

## விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறைஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 2 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா லேன் ஸ்ரீ பத்தினாட்சி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பூஜை, வழிபாடுகளின் நிறைவில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ.கேதீஸ்வரக்குருக்கள் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

## தென்மராட்சியில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளால் பயிர்கள் அழிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் சில கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் இரவு வேளைகளில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளால் பாரிய பயிர் அழிவு ஏற்படுவதாக நெற்பயிர்ச் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்,

இரவு ஒரு மணிக்கு மாடுகளை அவிட்டு வயல்களுக்குள் மேய விட்டு பின்னர் அதிகாலை நான்கு மணிக்கு பிடித்துக் கட்டும் நிலை காணப்படுகிறது.இதனால் பல விவசாயிகள் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தென் மராட்சியில் இவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறு த்தி நெற் பயிர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-30)

# உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிடாது ஜெனிவா விடயத்திலும் எமது முடிவு இதுவே

**(கொழும்பு)**

**சர்வதேச அரங்கில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகள் தலையீடு செய்வதற்கு இடமளிக்க முடியாது என்பதே மக்கள் சீனக் குடியரசின் நிலைப்பாடாகும். இதனை அடியொற்றிய தாகவே ஜெனிவாவிலும் எமது தீர்மானமும் செயற்பாடும் இருக்கும் என்று இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும், ஊடகப் பேச்சாளருமான லு சொங் தெரிவித்தார்.**

அந்தவகையில் மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள். இனமுரண்பாடுகளுக்கான தீர்வுகள் தொடர்பிலான விடயங்கள் இலங்கையின் உள்ளக விடயங்களாகும். இதில் மக்கள் சீனக் குடியரசு ஒரு போதும் தலையீடு செய்யாது. ஏனைய நாடுகள் தலையீடு செய்வதையும் விரும்பாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மனித உரிமைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் சில நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகள், இன முரண்பாடுகளுக்கான தீர்வுகள் தொடர்பிலான விடயங்கள் இலங்கையின் உள்ளக விடயமாகும். இலங்கை இறைமை உள்ள நாடு என்ற வகையில் இந்த விடயத்தில் பிற தரப்புக்கள் தலையிடுவது பொருத்த மற்றதாகும்.

உலகில் உள்ள எந்தவொரு நாட்டினதும் உள்ளக விடயங்களில் பிற நாடுகளோ அல்லது சக்திகளோ தலையீடு செய்வதற்கு இடமளிக்க முடியாது. இதனை அடியொற்றிய தாகவே ஜெனிவாவிலும் எமது நிலைப்பாடு அமையும்.

அடுத்ததாக, மனித உரிமைகள் விடயமானது இறைமையுள்ள ஒவ்வொரு நாடுகளினாலும் பின்பற்றப்படும் விடயமாகும். இந்த விடயம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு அரசியல் மயப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் விடயத்தினை நாடொன்றுக்கு எதிராக 'ஆயுதமாக' பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என அவர் உறுதிபடத் தெரிவித்தார். (நி-4)


## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

## வருடாந்த பொதுக் கூட்டம் - 2021

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் - 2021 எதிர்வரும் 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 14.02.2021 க்கு முன்பதாக எழுத்துமூலம் சமர்ப்பிக்கவும். வதிவிட மாற்றம் உள்ளவர்கள் தயவோடு என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

**"மத்தியின் மணிக்கொடி நித்திலம் நிலைக்கும்"**

(C-1319)

தொடர்புகளுக்கு:
077 700 8413

செயலாளர்,
யாழ்.மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.


# பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்திற்கு கிழக்கில் பூரண ஆதரவு



(மட்டக்களப்பு)

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை போராட்டத்திற்கு கிழக்கில் உள்ள அனைத்து கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன்றியங்கள் மற்றும் பொது அமைப்புகள் அனைவரும் முழுமையான ஆதரவை தெரிவித்துள்ளன.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை போராட்டத்திற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தின் தலைவர்களும் கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். (நி-4)


**PEARSON** INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp | IELTS

Register with us for IELTS Exam@ 29,999/=
074 188 7878-021 223 2250
infopearsonicollege@gmail.com (5417)

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffna

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண சபையின் நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும் இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.02.17 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk→ Recruitment and Exam→ Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம்மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சி.திருவாகரன்**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம். (C-1306) **01.02.2021**



## ICOF- வளர்பிறை உளவளத்துணை நிலையம்

Reg.No J/DS/SS/NGO/31 Since-1994

**ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துநர்களை உருவாக்கும் பயிற்சி நெறி**

**(Personality Growth & Co- Counsellor's Training Programme)**

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தில் புலமை வாய்ந்த வளவாளர்களினால் மனித ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துநர்களை உருவாக்கும் பயிற்சி நெறி 06.02.2021 அன்று எமது நிறுவனத்தில் ஆறாம் பிரிவினருக்கான **(6th Batch)** வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ❖ **பயிற்சிக்காலம் :- 3 மாதங்கள் (100 மணித்தியாலங்கள்) பிரதி சனி, ஞாயிறு (9.00 - 1.00)**
- ❖ பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தினால் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- ❖ கல்வித்தகைமை :- க.பொ.த சாதாரணதர சித்தி
- ❖ **விண்ணப்ப முடிவு திகதி :- 05.02.2021**
- ❖ தகுதியானவர்கள் நேரடியாக தமது பதிவுகளினை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
- ❖ அனுமதிக் கட்டணம் :- 1000.00

(5471)

வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல. 05, பிளச்சஸ் லேன்,சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 266 0209
021 222 8238

# உழுந்து உற்பத்தி மேற்கொண்ட விவசாயிகள்

## இடைத்தரகர்களின்றி உழுந்தினை விற்பனை செய்ய முடியும்



(நெளுக்குளம்)

**ஒருகிலோ உழுந்தினை 500 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்து இலாபத்தினை பெற்றுக்கொள்ள விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் விஜயகுமார் நேற்று தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசு உழுந்து இறக்குமதியினை நிறுத்தியிருந்தது டன். அரசினால் 16 உற்பத்திகளுக்கான உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் உழுந்திற்கான உத்தரவாத விலை 220 ரூபாயாக குறிக்கப்பட்டுள்ளது.

தற்போது சில்லறை விலையாக ஒரு கிலோ உழுந்து சில 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படுவதால் உழுந்தினை இறக்குமதி செய்ய வேண்டும் எனப் பலரும் கோரி வருகின்றனர்.

இம்முறை விதை உழுந்தினை கூடிய விலை கொடுத்து வாங்கி பயிர் செய்தும் விளைச்சலில் பாரிய வீழ்ச்சியினையே எதிர்நோக்கியுள்ளோம்.

சராசரி ஒரு ஏக்கருக்கு 350 கிலோ உழுந்து கிடைக்க வேண்டும். ஆனால் மழையின் பாதிப்பினால் 150 கிலோ தொடக்கம் 250 கிலோவரையிலான விளைச்சல் மட்டுமே பெறக்கூடியதாக வுள்ளது.

பல இடங்களில் பாரிய அழிவும் ஏற்பட்டுள்ளது. காப்புறுதியினை அறிமுகப்படுத்தியும் பலர் ஆர்வம் காட்டவில்லை. மிக விரைவில் அநுராதபுர மாவட்டத்தின் உழுந்தும் சந்தைக்கு வரவுள்ளது. அங்கும் விளைச்சல் குறைவு என்பதுடன் பாதிப்புக்களும் உள்ளன.

இவ்வளவு இடர்களுக்கும் மத்தியில் உழுந்தினை உற்பத்தி செய்தால் மொத்த கொள்வனவு விலையினை இடைத்தரகர்கள் 350 ரூபாவுக்குக்கொண்டு வந்துள்ளனர்.

இது உற்பத்திகள் சந்தைக்கு வரும்போது வழமையாக இடைத்தரகர்களால் மேற்கொள்ளப்படும் செயலே.

எனவே விவசாயிகள் இயலுமானவரை தமது உற்பத்திகளை விற்பனை செய்யாது சிறிது காலம் பாதுகாப்பாக வைத்திருந்து விற்பனை செய்வதுடன் சில்லறை விற்பனையிலும் ஈடுபட முடியும்.

விவசாயிகளை பாதுகாப்பதற்காகவே ஒரு கிலோ உழுந்திற்கு குறைந்தபட்சம் 460 ரூபாய் விலையினை வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம் அறிவித்திருந்தது.

விவசாய திணைக்களத்தின் விதைகள் பிரிவும் விரைவில் விதை நோக்கத்திற்காக கொள்வனவினை ஆரம்பிக்க உள்ளனர். அதன்போது குறைந்த பட்சம் 600 ரூபாயாக நிர்ணயிப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

உழுந்தினை நுகர்வோருக்கும் விவசாயிகளுக்கும் பாதிப்பின்றி இடைத்தரகர்களைத் தவிர்த்து நேரடி விற்பனையில் ஈடுபடவேண்டும்.

இவ்வருடம் ஜனவரியில் வவுனியா செட்டிகுள பிரதேச விவசாயிகள் அனைவரும் இணைந்து குறைந்தபட்சம் ஒரு கிலோ உழுந்தை 500 ரூபாய்யாக விற்பதாகத் தீர்மானம் எடுத்துள்ளார்கள்.

இயலுமானவரை 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்து இலாபத்தினை பெற்றுக்கொள்ள விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் கமநல சேவைகள் நிலையத்திற்கு 460 ரூபாவுக்குக் கையளிக்க முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-299)

# நெல் பயிர்களில் புதிய வகை நோய்

## கவலையுறும் விவசாயிகள்

(தருமபுரம்)

கல்மடுக்குளத்தின் கீழ்பயிர் செய்கையிலீடுபட்டிருக்கும் விவசாயிகளின் பலரது வயல்கள் பங்கஸ் நோய்த்தாக்கத்துக்குள்ளாகிவரும் நிலையில் தற்பொழுது மீண்டும் ஒரு புதுவித நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அறுவடைக்கு சில நாட்களேயுள்ள நிலையில் இவ்வாறு ஒரு நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. 10 வருடங்களிற்கு முன்னர் 501 என அழைக்கப்படும் நெல்லினத்திற்கும் இப்படியான நோய்த்தாக்கம் ஏற்பட்டதன் காரணமாக அந்த நெல்லினமே அழிந்து போனது.

அதேபோன்று தற்பொழுது சம்பா இனத்திற்கு இந்த நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதன் காரணமாக மீண்டும் இந்த நெல்லினத்தை பயன்படுத்த முடியுமா? என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.


இந்நோய்த்தாக்கம் காரணமாக பாதிக்கப்படும் விவசாயி களுக்கு அரசாங்கம் எந்த ஒரு நட்டஈட்டையும் எமக்கு வழங்கவில்லை எனத் தெரிவித்தனர். இனிவரும் காலங்களிலாவது நட்டஈட்டை பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.(5-4-316)

# கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மேலும் பிரிக்க கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட அதிக சனத்தொகை கொண்ட நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை ஒவ்வொன்றையும் இரண்டு பிரிவுகளாக பிரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளான 19 அம்பாள்நகர், 06 கோணாவில், 08 பாரதிபுரம், 40 மாயவனூர் ஆகிய நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அதிக சனத்தொகைகளைக்கொண்ட பிரிவுகளாக காணப்படுகின்றன. எனவே குறித்த நான்கு பிரிவுகளையும் ஒவ்வொன்றையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (5-4-315)



கிராமத்திற்கு ஒரு வீடு நாட்டிற்கு சுபீட்சம் எனும் அரசாங்க திட்டத்திற்கு அமைவாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்ட வீட்டினைப் பயனாளர் ஒருவருக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

(படம்:-மகாலிங்கம்)

# மழை முடிந்த பின்பும்

## குடியிருப்புப் பகுதியில் வெள்ளம்



(முறிகண்டி)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தெளிகரை கிராம மக்கள் வருடம் தோறும் வெள்ளம் தேங்குவதால் பாதிக்கப்படுகின்றனர்.

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த குடியிருப்பு பகுதியில் வெள்ளம் தேங்கி உள்ளது. மழை வெள்ள அனர்த்தம் முடிந்து பல நாட்களாகியும் குறித்த பகுதி மக்கள் வெள்ள அனர்த்தத்திலிருந்து மீள முடியாத நிலையில் உள்ளனர்.

சுமார் 4 வருடங்களிற்கு மேலாக குறித்த பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வெள்ள நீர் தேங்கி காணப்படும் நிலையில் அண்மையில் முதலையின் அச்சுறுத்தலிற்குள்ளானதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தம்மை குறித்த பகுதியில் குடியேற்றம் செய்தபோது அது தாழ்வு நிலப்பகுதி எனவும், அதற்கு மண் நிரப்பி தருவதாகவும் தெரிவிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை வழங்கப்பட்டவில்லை, நிறைவேற்றப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் வெள்ளம் இல்லாத போதும் குறித்த குடியிருப்பை சுற்றி வெள்ளம் காணப்படுகிறது.

தமது பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவும் தாம் வாழ்வதற்கு ஏற்ற பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தித் தருமாறும் அப்பகுதி மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (5-4-100)

# இராசிபலன்

01.02.2021
தை 19, திங்கட்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 8.38 மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.08 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை
சந்திராஷ்டமம்: அவிட்டம், சதயம்
சங்கடஹர சதுர்த்தி விரதம்

வளவன்


மேஷம்

மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனம் மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.


மிதுனம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, சுபவிரயங்கள் கூடும் நாள்.


கடகம்

கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.


சிம்மம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி

ஆரோக்கியத்தில் கவனம் தேவை விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் ,பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.


துலாம்

சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்,தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.


விருச்சிகம்

சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், புகழ் பெற்றவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


தனுசு

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமைகூடும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள்,வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


கும்பம்

வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.


மீனம்

நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்,நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

சுருங்க கூறலே அறிவின் ஆன்மா

# ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும் இல்லையேல் போராட்டம் வேறுவிதமாக மாறும்

## வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமான ஆயிரம் ரூபாய், 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் இம்முறை போராட்டமானது வேறு வடிவில் அமையுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



குறித்த ஊடக சந்திப்பில் வடிவேல் சுரேஷ் மேலும் கூறியுள்ளதாவது,

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொடுக்கப்படும் என நாட்டில் ஜனாதிபதி அறிவிப்பு விடுத்தார். ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர், ஆயிரம் ரூபாய் குறித்த யோசனையை முன்மொழிந்தார்.

அரசாங்கம் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடிப்படை சம்பளத்தை 25 ரூபாயினால் உயர்த்துவதே கம்பனிகளின் கோரிக்கை. இதனை ஏற்கமுடியாது. ஆயிரம் ரூபாய் அவசியம்.

அந்தவகையில் பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் சம்பள உயர்வு கிடைக்கவேண்டும். இல்லையேல் இம்முறை போராட்டம் வேறு மாதிரியாக அமையும்" என அவர் தெரிவித்தார். (நி-4)

# எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் நாளாந்தம் 750 வரையில் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வைரஸ் பரவல் வழிமுறைகளை முறையாக மதிப்பீடு செய்யாவிட்டால் எதிர்வரும் நாட்களில் நாளாந்தம் ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடிய நிலைமையும் ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

எதிர்காலத்தில் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதோடு, குறிப்பாக மேல் மாகாணத்திற்கு வெளியில் மரணங்கள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள் என்பதால் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

வைத்தியசாலைகளிலிருந்து வீட்டுக்கு அனுப்புவது தொடர்பில் சர்வதேச மட்டத்தில் மதிப்பீடு செய்து அதற்கான வழிகாட்டல்களை வெளியிட்டதன் காரணமாகவே நாளொன்றுக்கு ஆயிரத்திற்கும் அதிகமானோரை குணப்படுத்தி வீடுகளுக்கு அனுப்ப முடிந்துள்ளது.

இதேபோன்று நாளாந்தம் பதிவாகின்ற மரணங்களின் எண்ணிக்கை ஆரம்பத்தில் சராசரியாக 3 - 4 இற்கு இடையிலேயே காணப்பட்டது. ஆனால் தற்போது நாளொன்றுக்கு 7 - 8 மரணங்கள் பதிவாகின்றன. இது எதிர்காலத்தில் முகங்கொடுக்கப் போகும் ஏதேனும் அபாய நிலைக்கான எச்சரிக்கையா என்பதை ஆழமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

ஆரம்பத்தில் கொழும்பு மாநகரசபையை அண்மித்த பகுதிகளிலேயே நூற்றுக்கு 90 வீதமான மரணங்கள் பதிவாகின. ஆனால் வெள்ளியன்று பதிவான 8 மரணங்களில் அனைத்தும் கொழும்பு மாநகரசபைக்கு வெளியிலேயே பதிவாகியுள்ளன.

எதிர்காலத்தில் மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதோடு, மேல் மாகாணத்திற்கு வெளியில் மரணங்கள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கடனை திருப்பிச் செலுத்த முடியாத அரசு எவ்வாறு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும்

## அநுரகுமார கேள்வி


(கொழும்பு)

கடன் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் மக்களின் பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுப்பது என தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளது.

காலியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, கருவூலத்தால் கிடைக்கும் ஆண்டு வருமானத்தை விட கடனை திருப்பிச் செலுத்தும் தொகை அதிகமாகும் என சுட்டிக்காட்டினார்.

2021 ஆம் ஆண்டில் இலங்கையின் வருமானம் 1,919 பில்லியன் என்றும், 2021ஆம் ஆண்டிற்கான திருப்பிச் செலுத்தும் கடன் 2,017 பில்லியன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2002 உயர்தரப் பிரிவு மாணவர்களின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த இரத்ததான முகாமில் கல்லூரியின் அதிபரும், பழைய மாண வருமான ரட்ணம் செந்தில்மாறன் உள்ளிட்ட 2002 உயர்தரப் பிரிவு மாணவர்கள் பங்குபற்றினர். (படங்கள்:-ரவிசாந்)



கெற்பேலி அ.த.க பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தொகுதி திறப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் த.ஞானராசா தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம் சார்ள்ஸ் கலந்து கொண்டு வகுப்பறைத் தொகுதியைத் திறந்து வைத்திருந்தார். மேலும் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன்,வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்,வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் மற்றும் தென்மராட்சி வலயக்க ல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்ட னர். (படம்-சுபேசன்)



சாவகச்சேரி-சங்கத்தானை மதுவன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கி ழமை சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது வீரசிங்கம் வீதி மற்றும் மீசாலை கமலாசினி வித்தியாலய சூழல் ஆகியன துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (படம்: சுபேசன்)



கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திற்கு தியாகி உமா மகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பி னால் கடந்த செவ்வாய்க்கிழமை எண்பதாயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)



சாவகச்சேரி மீசாலை இலுவம் செல்வ விநாயகர் சனசமூக நிலையத்தினரால் தமது எல்லைக்குட்பட்ட மண்டுவில் கிராமத்தினைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-விஜயவாசன்)



ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் சமுர்த்தி பயனாளி களின் பிள்ளைகளுக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் அண்மையில் சிப்தொற கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-சுபேசனி)



ஊர்காவற்றுறை, தம்பட்டி அம்பலவாணர் வீதியைப் புனரமைப்பதற்கான அடிக்கல்லை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டி வைத்தார். (படம்:-மகாலிங்கம்)



புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சந்திரரூபன் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் பத்து மாணவர்களு க்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைத் தார். (படம்:-தவசீலன்)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய த்தின் அருகாமையிலுள்ள வெளிக்கள நிலைய த்திற்கு முன்பாக அண்மையில் மரம் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது .இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந் திரன் கலந்து கொண்டார். (படம்:-மகாலிங்கம்)





வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத் தினால் முல்லைத்தீவு மூன்று முறிப்பு அர சினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர் களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.



வரலாற்றுப் புகழ்வாய்ந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள கோமாதா இல்லம் பரிபா லனசபைத் தலைவர் சி.கயிலைநாதன் தலை மையில் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக் கப்பட்டது. (படம்:-விஜயகாந்)

# உடைத்தெறியப்பட்டது ஆறு அடி காந்தி சிலை



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் மகாத்மா காந்தி சிலை உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் நினைவு தினம் நாடு முழுவதும் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவில் காந்தி சிலை உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள் வெளியாகியது அதிர்ச்சி அளிப்பதுடன், இந்தியர்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் ரத்தம் கசிய வைத்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள டேவிஸ் நகரின் மத்திய பூங்காவில் தேசபிதா மகாத்மா காந்தியின் 6 அடி உயர வெண்கலச்சிலை வைக்கப்பட்டிருந்தது.

இந்த சிலை சுமார் 300 கிலோ எடையுள்ள வெண்கலத்தால்உருவாக்கப்பட்டதாகும்.(நி-4)

# ஆப்கானில் கார் குண்டு வெடிப்பு 14 வீரர்கள் உடல் சிதறிப்பலி

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் இராணுவ தளம் அருகே நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் 14 வீரர்கள் உடல் சிதறி பலியாகினர்.**

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவர தலிபான் பயங்கரவாத அமைப்பும் ஆப்கானிஸ்தான் அரசும் கட்டார் தலைநகர் டோஹாவில் 3 மாதங்களுக்குமேலாக அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் குறிப்பிட்டு சொல்லும் வகையில் எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், ஆப்கானிஸ்தானில் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணமான நங்கார்ஹரில் பாகிஸ்தானின் எல்லையையொட்டி அமைந்துள்ள ஷிர்ஷாத் மாவட்டத்தில் உள்ள இராணுவ தளத்தில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர்.



வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டி வந்த பயங்கரவாதிகள் அதை இராணுவ தளத்தின் நுழைவாயில் முன்பு நிறுத்தி வெடிக்கச் செய்தனர். அது பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

இந்த குண்டுவெடிப்பில் 14 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர். மேலும் 4 வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் கடந்த காலங்களில் இதுபோன்ற தாக்குதல்களை தலிபான் பயங்கரவாதிகள் நடத்தி இருப்பதால் இந்தத் தாக்குதலின் பின்னணியிலும் அவர்களே இருப்பார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது. (நி-4)



சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னியின் ஆதரவாளர்கள் நேற்றும் அரசாங்க எதிர்ப்புப் பேரணியை நடத்தினர்.

போராட்டங்களுக்கு எதிராக பொலிஸார் தடை விதித்துள்ளதுடன், கொரோனாத் தொற்றைக் காரணம்காட்டி கடும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர். எனினும், இவற்றை மீறி போராட்டங்கள் நடைபெறுவதாக சர்வதேச செய்திகள் தெரிவித்தன.

# அத்தியாவசிய தேவை தவிர்ந்த அனைத்து பயணங்களுக்கும் தடை

(பரிஸ்)

பிரான்ஸ் புதிய கோவிட் -19 எல்லைக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. எனினும் நாடு தழுவிய மற்றொரு சமூக முடக்கலை அமுலாக்கும் யோசனைகளை அரசு நிராகரித்துள்ளது.

புதிய கட்டுப்பாடுகளின் பிரகாரம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியில் இருந்து அத்தியாவசியத் தேவை தவிர்ந்த அனைத்துப் பயணங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் இருந்து பிரான்ஸ் வருவோருக்கும் சோதனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

எனினும் பிரான்ஸின் புதிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில் பெரியவில் தாக்கம் செலுத்தாது. பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரான்ஸின் புதிய எல்லைக் கட்டுப்பாடுகள் இங்கிலாந்தை பாதிக்கும் எனக் கருதப்படுகிறது.

ஏனெனில் இங்கிலாந்து இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லை. எனினும் பிரான்ஸ் - இங்கிலாந்து இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசிய போக்குவரத்துக்கள் புதிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் பாதிக்கப்படாது என பிரெஞ்சு போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-4)

# புடினுக்குச் சொந்தமான மாளிகைக்கு உரிமை கொண்டாடும் செல்வந்தர்



(மொஸ்கோ)

கருங்கடல் கரையோரத்தில் அமைந்துள்ள 1.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள அரண்மனை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்குச் சொந்தமில்லை என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ரஷ்ய பெரும் செல்வந்தரான அர்காடி ராட்டன்பெர்க் குறித்த அரண்மனையை தன்னுடையது என்று கூறியுள்ளார்.

கிரெம்ளின் விமர்சகர் அலெக்ஸி நேவல்னி எழுதிய அரண்மனை பற்றிய வீடியோ அறிக்கையில், இந்த அரண்மனை புடினுக்குச் சொந்தமானது என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ரஷ்ய பெரும் செல்வந்தரும் ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு மிக நெருக்கமான அர்காடி ராட்டன்பெர்க், இந்த அரண்மனையைத் தன்னுடையது எனக் கூறியுள்ளார்.

ரஷ்யா முழுவதும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை தீவிரமடைந்து வரும் நிலையில் அவரது இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. (நி-4)

# பாலைவனத்தில் ஒரு சோலைவனம்



(சிலி)

பாலைவனம் என்றாலே கண்ணுக்கு எட்டிய தூரம் எங்கும் வறண்ட நிலமும் மணலும் ஒரு சில அரிய மரங்களை மட்டும் தானே பார்த்திருப்போம்.

ஆனால்சிலி நாட்டில் உள்ள அடாகாமா என்ற பாலைவனத்தில் வருடத்தில் செப்டெம்பர் முதல் நவம்பர் மாதம் மட்டும் 200 இற்கும் மேற்பட்ட வகையான வண்ண மலர்கள் அதிகளவில் பூத்துக் குலுங்குகின்றன.

வறண்ட நிலமான பாலைவனத்தில் காணும் திசையெங்கும் அழகழகான பூக்கள் பூத்துக் குலுங்குவதற்கு இயற்கையின் இரகசியம் மட்டும் முக்கிய காரணம் ஆகும். (நி-4)

# 31 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகள் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது




(கொழும்பு)

கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் முன் வரிசையிலிருந்து செயற்பட்டு வரும் இராணுவத்தினருக்கு ஏற்றுவதற்காக 31 ஆயிரம் கொவிட்-19 தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கிடைத்திருக்கும் அஸ்ட்ராஜெனெகா, கோவிஷீல்ட் தடுப்பூசிகளில் இராணுவத்தினருக்கு செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட 31 ஆயிரம் தடுப்பூசிகளில் ஒரு தொகுதி இராணுவ மருத்துவமனைகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (நி-4)

# புதிய அரசியலமைப்புக்கான நிபுணர் குழுவைச் சந்திக்கிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்புக்கான வரைவினைத் தயாரிக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர் குழுவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதி சந்திக்கவுள்ளது.**

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், நிபுணர் குழு எம்மைச் சந்திப்பதற்கான நேர ஒதுக்கீட்டைக் கோரியிருந்தது. 20ஆம் திகதி காலை 10.30 மணியளவில் சந்திப்பதற்கு தீர்மானிக்கப்படவுள்ளது.

இதேவேளை, புதிய அரசியலமைப்புக்கான வரைவினைத் தயாரிக்கும் நிபுணர் குழுவானது, பிரதான அரசியல் கட்சிகளுடன் தனித்தனியான சந்திப்புக்களை நடத்தி கருத்தறியும் செயற்பாட்டினை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# இணையவழி நிதி மோசடி ஒருவர் சிக்கினார்

(கொழும்பு) .

பொருட்களை விற்பனை செய்வதற்கான இணையவழி விளம்பரங்கள் மூலம் பொது மக்களை ஏமாற்றி நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் வெலிகமவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 29 வயதுடைய நாரஹேன்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். சந்தேக நபருக்கு பல்வேறு தேசிய அடையாள அட்டை எண்களின் கீழ் பல வங்கிக் கணக்குகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் குறித்து முறையிட பொதுமக்கள் 071 859 1753 என்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரின் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

# அரச சொத்துக்களை வெளிநாடுகளுக்கு அரசாங்கம் விற்காது - சுசில்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் எந்தவொரு அரச சொத்தையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்காது என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அனைத்து விடயமும் கருத்திற் கொள்ளப்படும்.

ஜனாதிபதியின் கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டதற்கு அமைவாகவே அரசாங்கம் செயற்படும்.

கிழக்கு முனையத்தின் செயற்பாடுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், இறுதி முடிவை எட்டுவதற்கு முன்னர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை கூடி ஆராயும் என்றும் இராஜாங்க அமைச்சர்



சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2220

Search for people, places and things

யுகேஷ்




வானதி




திவா




மஞ்சு




விலேஷ்




கயல்விழி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தடுப்பூசி உற்பத்திக்கு விருப்பம் தெரிவித்த ரஷ்யா

(கொழும்பு)

**ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி கொவிட் -19 தடுப்பூசியை இலங்கையில் உற்பத்தி செய்ய அனுமதிப்பதற்கான தனது விருப்பத்தை ரஷ்யா வெளிப்படுத்தியுள்ளது.**




தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் (NMRA ) ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு அங்கீகாரம் அளித்தால், இலங்கையில் இந்தத் தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய முடியும் என ரஷ்யா தெரிவித்ததாக சிரேஷ்ட அரச அதிகாரி ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

ஸ்புட்னிக் வி தடுப்பூசி ஏற்கனவே இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வருகிறது,

300 மில்லியன் அளவு தடுப்பூசியை இந்திய ஆய்வகங்களில் தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் - ரஷ்யாவும் கடந்த ஆண்டு கையெழுத்திட்டன.

சீன மற்றும் ரஷ்யாவின் தடுப்பூசிகளின் செயல்திறன் நிரூபிக்கப்பட்டால் இலங்கையில் அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கீகாரம் அளித்துள்ளார்.

ஆனால் சீன மற்றும் ரஷ்யாவின் தடுப்பூசிகளின் அவசரகால பயன்பாட்டுக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் இதுவரை அனுமதி வழங்கவில்லை.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிக்கு இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியதையடுத்து 5 இலட்சம் தடுப்பூசிகள் கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு இந்தியாவால் இலவசமாக வழங்கப்பட்டன.

இதேவேளை, 3 இலட்சம் சினோஃபாம் தடுப்பூசிகளை இலங்கைக்கு இலவசமாக வழங்க சீனா தயாராக உள்ளதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சினோஃபாம் தடுப்பூசிக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால் இந்தத் தடுப்பூசிகள் உடனடியாக அனுப்பப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் ரஷ்ய அரசாங்கம் இலங்கைக்கு தடுப்பூசிகளை இலவசமாக வழங்குவதாக அறிவிக்கவில்லை. ஆனால் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்ய அனுமதிப்பதன் மூலம் குறைந்த செலவில் தடுப்பூசியை உற்பத்தி செய்து பயன்படுத்த முடியும் என்பதே இலங்கைக்கு நன்மையாகக் கருதப்படுகிறது. (நி-4)

# அத்தியாவசிய சேவையாக துறைமுக சேவை பிரகடனம்

(கொழும்பு)

துறைமுக சேவையை அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியுள்ளார்.

அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக ஜனாதிபதி துறைமுக சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்தியாவுடனான உத்தேச ஒப்பந்தத்தை இரத்து செய்யக் கோரி துறைமுகத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் முதல் சட்டப்படி வேலை செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கொவிட்-19 தொற்று நோய் கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகளை சீர்குலைத்த போது, நவம்பர் 17 ஆம் திகதி ஜனாதிபதி துறைமுக அதிகார சபையை அத்தியாவசிய சேவையாக அறிவித்தார்.

இந்த நிலையில் இரண்டு மாதங்களுக்கு பின்னர் இரண்டாவது தடவையாக கொழும்பு துறைமுக அதிகாரசபை பணிகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டது. (நி-4)

# தனிமைப்படுத்தல் நிலையங்கள் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

சவேந்திர சில்வா

நாட்டிற்கு அழைத்து வர எதிர்பார்க்கப்படும் இலங்கையர்களை தங்க வைப்பதற்காக தனிமைப்படுத்தல் நிலையங்கள் அதிகரிக்கப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் பலாலியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் முப்படையினர் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என கூறினார்.

புதிய வெளிநாட்டு வருகையாளர்களை தனிமைப்படுத்த யாழில் புதிய தனிமைப்படுத்தல் நிலையம் நிறுவப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையம் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்திற்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் தேவையான அனைத்து பங்களிப்பையும் வழங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒரு பாடம்

அந்தக் காலத்திலே எல்லாம் படிக்கிறது எப்படி தெரியுமா? குருகுலவாசம் சென்று படிக்க வேண்டும்.

ஆசிரியர் ஆசிரமத்தில் இருப்பார். அங்கே போய் அவருக்குத் தொண்டுகள் செய்ய வேண்டும். துணி துவைத்துப் போடவேண்டும்.

தூங்கும் போது காலைப் பிடித்து விட வேண்டும். புழுக்கமாக இருந்தால் விசிற வேண்டும். அப்படியே அவர் சொல்லிக் கொடுக்கும் பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். அவர் சொல்லிக் கொடுப்பதை ஓலைச் சுவடிகளிலே எழுதிக் கொள்வார்கள்.

ஆக குருகுலவாசம் என்பது மனதையும் பண்படுத்தும் அறிவையும் பண்படுத்தும். அப்படி ஒரு பயிற்சி அது. அந்தக் காலத்திலே பஞ்சபாண்டவர்கள் ஒரு குருகுலத்தலே படிக்கப் போனார்களாம். ஏற்கனவே அங்கே ஒரு பதினைந்து பேர் இருந்தார்களாம். இவர்களையும் சேர்த்து மொத்தம் இருபது பேர்.

எல்லோரும் மிகவும் ஆர்வத்துடன் அங்கே படித்துக் கொண்டு இருக்கின்றார்கள். இரண்டு ஆண்டுகள் ஓடிப் போய்விட்டது. எல்லோரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம். ஆசிரியர் ஒவ்வொருவராகக் கூப்பிட்டார்.

இதுவரைக்கும் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்று கேட்டார்.

அவர்கள் எழுதி வைத்ததைச் சொன்னார்கள். கற்றுக் கொண்டதைச் சொன்னார்கள். அங்கே படிக்க வந்தவர்கள் எல்லோருமே புத்திசாலிகள். இளவரசர்களாக இருக்கின்றவர்கள் வேறு. அதனால் அவர்களிடம் அபாரமான கல்வி அறிவை எதிர்பார்த்தார். ஒருத்தன் வந்தான். தான் எழுதி வைத்திருந்த சரித்திரப்பாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான்.

இன்னொருவன் வந்தான். தான் எழுதி வைத்திருந்த பூகோளபாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான். இப்படி ஒவ்வொருத்தராக வந்து படித்துக் காண்பித்துப் போகின்றார்கள். கடைசியாக தர்மர் வருகின்றார். பேசாமல் நிற்கின்றார். தன்கையில் இருந்த ஓலைச் சுவடிக் கட்டைப் பிரிக்கவே இல்லை. ஆசிரியர் இவரிடம் தான் அதிகமாக எதிர்பார்த்தார்.

ஆனால் அவர் பேசாமல் நிற்கின்றார். நீ என்ன கற்றுக் கொண்டாய்.. சொல்லு... ஓலைச் சுவடியைப் பிரித்துப்படி என்றார் அந்த முனிவர். தர்மர் அசையவே இல்லை. மெதுவாக சொன்னார். ஐயா ...நான் கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்று தான். அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கியமான பாடமாக அமையும்..என்றார்.

என்னிடம் இரண்டு வருடங்களாக படித்துக் கொண்டு கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்று தானா? என்றார் முனிவர். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏனைய மாணவர்களைவிட இவர் பண்புகளில் உயர்நதவர், அறிவில் சிறந்தவர், வயதில் முதிர்ந்தவர். இவரே இப்படிச் சொன்னால் ஏனையவர்கள் நிலைமை என்ன? அவர்கள் கெட்டுப் போய் விடுவார்கள்.

தர்மா நன்றாக யோசனை செய்து பதில் சொல்... இரண்டு வருடமாக நீ கற்றுக் கொண்டது என்ன என்று தானே கேட்கின்றேன் என்றார் கொஞ்சம் கோபமாக. தர்மர் முகத்திலே எந்த மாறுதலும் இல்லை.

இல்லை ஐயா... இரண்டு வருடமாக நான் கற்றுக் கொண்ட முக்கியமான பாடம் ஒன்றே ஒன்று தான் என்றார். இப்பொழுது முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது. உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னைவிட வயதிலே குறைந்தவர்கள் எவ்வளவு பாடம் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

எவ்வளவு விரிவாக படித்துக் காட்டினார்கள். நீயும் ஓலைச் சுவடியிலே நிறையக் குறித்துத் தானே வைத்திருக்கின்றாய்... ஏன் எடுத்துப் பிரிக்கக் கூடாது? என்றார். ஐயா..நான் சொல்றது உங்களுக்கு ஏமாற்றமாக இருந்தால் என்னை மன்னிக்க வேண்டும். நான் மிகவும் முக்கியமான பாடமாக கற்றுக் கொண்டிருப்பது ஒன்றே ஒன்று தான். ஏனைய எதையும் எடுத்துச் செல்வதற்கு நான் விரும்பவில்லை..என்றான் தர்மன்.

இதைக் கேட்டவுடன் எல்லா மாணவர்களும் சிரித்துக் கொண்டார் கள். முனிவருக்குக் கோபம் அளவுக்கு மீறி வந்துவிட்டது. ஓங்கி அறைந்துவிட்டார் தர்மரை கன்னத்திலே. தர்மர் கன்னம் சிவந்துவிட்டது. கண்கள் கலங்கி விட்டது. ஆனாலும் அவர் அமைதியை இழக்கவில்லை. தலைகுனிந்து நின்றார். இவருடைய பிடிவாதம் முனிவருக்கு இன்னமும் ஆத்திரத்தை உண்டாக்கியது. இன்னொரு கன்னத்திலேயும் அறைந்துவிட்டார். எல்லோரும் பயந்து போய் அமைதியாக நிற்கின்றார்கள். முனிவர் கத்துகின்றார். அப்படி நீ கற்றுக் கொண்ட அந்த முக்கியமான பாடம் என்ன? அதையாவது சொல்லு என்றார். ஐயா..அதை மட்டும் ஒரு ஓலைச் சுவடியில் தனியாக குறித்து வைத்திருக்கின்றேன் படியுங்கள் என்றான் தர்மன். முனிவர் சத்தம் போட்டுப் படிக்கின்றார். எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும் நிதானம் இழந்து கோபத்துக்கு ஆளாகக் கூடாது இதுதான் அதிலே எழுதியிருந்தது. அந்த ஒரு கணத்திலேயே முனிவரும் எல்லா மாணவர்களும் தர்மரைப் புரிந்து கொண்டார்கள். அவர் கற்றுக் கொண்டது ஏட்டுச் சுரைக்காய் அல்ல.. வாழ்க்கையில் பயன்படக் கூடிய முக்கியமான அனுபவப் பாடம் அது.


முனிவர் கண்களிலே கண்ணீர். தர்மரை அன்போடு கட்டித்தழுவிச் சொன்னார். தர்மா என்னை மன்னித்துவிடு ..நீ மாணவன் அல்ல.. ஆசிரியன்.. நான் இதுவரை தெரிந்து கொள்ளாத அனுபவப்பாடத்தை நீ எனக்குக் கற்றுத் தந்துவிட்டாய். நான் உனக்கு ஆசிரியன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்குத் தான் பெருமை என்றார். நிதானம் தவறக் கூடாது என்பது நாம் எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடம்.

இந்தக் காலத்தில் சில நிதானம் தவறாத ஆண்கள் உண்டு. அவர்கள் வேறு விதம். ஒரு ஆசிரியர் மாணவனை ஒரு கன்னத்தில் அறைந்துவிட்டார். இவன் நிதானம் தவறவில்லை. ஏன்? என்று கேட்டார்கள். நான் நிதானம் தவறியிருந்தால் எங்கள் வாத்தியார் இன்னொரு கன்னத்திலேயும் அறைந்திருப்பார். என்றான்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

**13**

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### உள்ளூராட்சிச் சபைகளுக்கான (மாநகர, நகர மற்றும் முதலாவது பிரதேச சபைகளுக்கான) தேர்தல்-1991

தேர்தல் திணைக்களத்தைப் பொறுத்தவரையில், 1991ஆம் ஆண்டு மே மாதத்தில் 10 மாநகர சபைகளுக்கும் 33 நகர சபைகளுக்கும் மற்றும் 194 பிரதேச சபைகளுக்கும் (எல்லாமாக 237 உள்ளூராட்சிச் சபைகளுக்கு) தேர்தல்கள் நடத்தியதே அவ்வாண்டின் அதிமுக்கிய பணியாகவிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக 71 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டன.

கொள்கையளவில் சகல (வடக்கு, கிழக்கு தவிர்ந்த) உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல்களைத் தனியொரு நாளில் நடத்திய முதல் தருணம் இதுவாகும். 1991 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி இலங்கையில் நடந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான (மாநகர, நகர மற்றும் முதலாவது பிரதேச சபைகளுக்கான) தேர்தலானது 1990ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்திற்கிணங்க நடத்தப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தேர்தல் திணைக்களத்தைப் பொறுத்தவரையில், 1991ஆம் ஆண்டு மே மாதத்தில் 10 மாநகர சபைகளுக்கும் 33 நகர சபைகளுக்கும் மற்றும் 194 பிரதேச சபைகளுக்கும் (எல்லாமாக 237 உள்ளூராட்சிச் சபைகளுக்கு) தேர்தல்கள் நடத்தியதே அவ்வாண்டின் அதிமுக்கிய பணியாகவிருந்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர இலங்கையின் ஏனைய 7 மாகாணங்களிலும் நடைபெற்ற இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியை ஈட்டியது.**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர இலங்கையின் ஏனைய 7 மாகாணங்களிலும் நடைபெற்ற இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியை ஈட்டியது. இலங்கையிலுள்ள 25 நிர்வாக மாவட்டங்களிலும் அப்போது 257 பிரதேச சபைகள் நிறுவப்பட்டிருந்தன. இவற்றுள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள 8 மாவட்டங்களிலும் 63 பிரதேச சபைகள் இருந்தன. இந்த 8 மாவட்டங்களிலும் 1991 இல் தேர்தல்கள் நடைபெறவில்லை.

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள 8 மாவட்டங்களிலும் 71 உள்ளூராட்சிச் சபைகள் இருந்தன. இந்த 8 மாவட்டங்களிலும் 1991 இல் தேர்தல்கள் நடைபெறவில்லை. அது நடைபெறாத காரணத்தால் அச்சபைகளின் பதவிக்காலம் 1992.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. இதே நேரம் 1987ஆம் ஆண்டில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படாத வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஏனைய உள்ளூராட்சிச் சபைகள் (36 பிரதேச சபைகள்) தொடர்பாக அவற்றின் பதவி ஆரம்பகாலம் (இப் பிரதேச சபைகள் உத்தியோக பூர்வமாக நிறுவப்படாத காரணத்தால்) 1993.01.01 திகதி வரை நீடிக்கப்பட்டது.**

தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 71 உள்ளூராட்சிச் சபைகளுக்கான வாக்கெடுப்பொன்று 1991-12-31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டியிருந்தது. அது நடைபெறாத காரணத்தால் அச்சபைகளின் பதவிக்காலம் 1991 மார்ச் மாதம் 5 ஆம் திகதிய 652/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதியொன்றால் 1992.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. இதே நேரம் 1987 ஆம் ஆண்டில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படாத வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஏனைய உள்ளூராட்சிச் சபைகள் (36 பிரதேச சபைகள்) தொடர்பாக அவற்றின் பதவி ஆரம்பகாலம் (இப் பிரதேச சபைகள் உத்தியோகபூர்வமாக நிறுவப்படாத காரணத்தால்) 1993.01.01 திகதி வரை நீடிக்கப்பட்டது.

### உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம்

1991 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சிச் சபைகளைத் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலங்கள் இருவிதமாக இருந்தது. அவையாவன,

அ) பதவிக்காலம் 1991, ஜூலை மாதம் 01 ஆம் திகதி ஆரம்பமானவை. 1991-05-11 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்ட 257 உள்ளூராட்சிச் சபைகள் இதனுள் அடங்கும்.

ஆ) பதவிக்காலம் 1983, 1987 ஆகிய ஆண்டுகளில் இயங்க ஆரம்பித்த உள்ளூராட்சிச் சபைகள். அவற்றை இரு வகையாகப் பிரிக்கலாம்.

(1) கிழக்கு மாகாணத்தில் 1987 ஆம் ஆண்டில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் (மட்டக்களப்பு மாவட்டம் - 3 சபைகள், அம்பாறை மாவட்டம் - 6 சபைகள், திருகோணமலை மாவட்டம் - 7 சபைகள்).

இவ் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1993.12.31 ஆம் திகதி முடிவடைவதாயிருந்தும் அவற்றின் பதவிக்காலம் 1993.10.22 ஆம் திகதிய 789/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 1994.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

2) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1987ஆம் ஆண்டில் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யாத 42 உள்ளூராட்சிச் சபைகளினதும் (யாழ்ப்பாணம் மாவட்டம் - 16 சபைகள், கிளிநொச்சி மாவட்டம் - 3 சபைகள், மன்னார் மாவட்டம் - 4 சபைகள், வவுனியா மாவட்டம் - 4 சபைகள், முல்லைத்தீவு மாவட்டம் - 4 சபைகள், மட்டக்களப்பு மாவட்டம் - 8 சபைகள், அம்பாறை மாவட்டம் - 2 சபைகள், திருகோணமலை மாவட்டம் - 1 சபை) மற்றும் 1987 ஆம் ஆண்டில் தேர்தல் நடந்த 13 உள்ளூராட்சிச் சபைகளினதும் (வவுனியா மாவட்டம் - 1 சபை, மட்டக்களப்பு மாவட்டம் - 1 சபை, அம்பாறை மாவட்டம் - 6 சபைகள், திருகோணமலை மாவட்டம் - 7 சபைகள்) பதவிக்காலமும் 1994.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

**கிழக்கு மாகாணத்தில் 1987 ஆம் ஆண்டில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1993.12.31 ஆம் திகதி முடிவடைவதாயிருந்தும் அவற்றின் பதவிக்காலம் 1994.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. அதேபோல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1987ஆம் ஆண்டில் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யாத 42 உள்ளூராட்சிச் சபைகளினதும் பதவிக்காலமும் 1994. 12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.**

### வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்கள் -1994

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபைக்கும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், அம்பாறை மாவட்டத்தில் 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 11 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1993, ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நியமன அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

இவற்றை விட ஒரு மாநகர சபை, 3 நகரசபை மற்றும் 36 பிரதேச சபைகளும் ஆகியவையும் அடங்கும். இவ்வாறு வழங்கப்பட்ட அறிவித்தல்கள் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 05ஆம் பிரிவின் கீழ் 1993ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதிய 781/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதியொன்றின் மூலம் வறிதாக்கப்பட்டன.

அதன்பின் நியமன அறிவித்தல்கள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி மீண்டும் வழங்கப்பட்டது. அவை பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி திகதிய 794/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதியொன்றின் மூலம் வறிதாக்கப்பட்டன.

இவ் உள்ளூராட்சிச் சபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நியமன அறிவித்தல்கள் 1993ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி மீண்டும் வழங்கப்பட்டன.

**வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபைக்கும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் (ஒரு மாநகர சபை மற்றும் 11 பிரதேச சபைகள்), அம்பாறை மாவட்டத்தில் 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் (ஒரு நகர சபை மற்றும் 15 பிரதேசசபைகள்), திருகோணமலை மாவட்டத்தில் 11 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் (ஒரு நகர சபை மற்றும் 10 பிரதேசசபைகள்), உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்டது.**

(தொடரும்...)

# பூமியில் இல்லாத விடயங்களை ஐ.நா.அறிக்கையில் காணலாம்

## என்கிறார் தினேஷ் குணவர்த்தன

**(கொழும்பு)**

**இந்தப் பூமியிலேயே இல்லாத விடயங்களைக்கூட இலங்கை தொடர்பான ஐ.நா.அறிக்கையில் உள்ளடக்கி உள்ளன என வெளிவிவகார அமைச்சர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.அறிக்கை தொடர்பான எமது நிராகரிப்பை கவலை மற்றும் கண்டனத்தை ஜெனிவாவுக்கு அனுப்பியுள்ளோம் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் நாடு ஒன்றின் உள்ளக இறைமையில் எவரும் தலையிட முடியாது எனவும் தெரிவித்துள்ளார், (நி-4)

# மிருகக்காட்சிச்சாலைகள் மீள் திறப்பு



(கொழும்பு)

வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் செயற்படும் தெஹிவளை பின்னவல மற்றும் திரியகம மிருகக்காட்சிச்சாலைகள் இன்று முதல் மீள் திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-4)

# செய்தித்துளிகள்

## நுவரெலியாவில் நில அதிர்வு

(ஹற்றன்)

நுவரெலியா, வலப்பனை பகுதியில் நேற்றுக் காலை சிறிய அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வானது ரிக்டர் அளவுகோலில் 2 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. (நி-4)

## சுகாதார வழிகாட்டல்களை மீறிய 52 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமைக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 52 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 2,905 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு இணங்காத நபர்களை கண்டறிவதற்கான சிறப்பு நடவடிக்கை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)


## மட்டு வாவியில் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- கண்ணகி அம்மன் ஆலய வீதியிலுள்ள வாவியில், ஆணொருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 60 வயதுடைய ஆணொருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் தொடர்பாக எந்த விபரமும் அறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## இறை சக்தியை அதிகரிக்கும் கும்பாபிஷேகம்

*(தொடர்ச்சி)*

*ஒரு ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் செய்வது என்பது அந்த ஆலய இறை சக்திக்கு மீண்டும் புத்துணர்ச்சி ஏற்படுத்துவது போன்றதாகும்.*

*12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை எந்த ஆலயத்தில் மிக மிக நேர்த்தியாக கும்பாபிஷேகம் செய்யப்படுகிறதோ அந்த ஆலயம் இறை சக்தியை இந்த உலகம் இன்பம் பெறும் வகையில் வாரி வாரி வழங்கும் என்பது நிதர்சனமான உண்மை.*

*கும்பாபிஷேகத்தைத் தமிழில் "பெருஞ்சாந்தி வைபவம்" என்றும் "திருக்குட முழுக்கு" என்றும் "திருக்குட நன்னீராட்டு விழா" என்றும் சொல்வார்கள். வைணவத்தில் சம்ரோட்சணம் என்று சொல்வார்கள்.*

*கும்பாபிஷேகத்தை எந்தெந்த கால கட்டங்களில் செய்ய வேண்டும் என்பதற்கு சில விதிகள் உள்ளன. அவற்றை 4 வகையாகப் பிரித்துள்ளனர்.*

*1.ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஒரு ஆலயம் அமைத்து புதிதாக மூலவரைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்வதை அனாவர்த்தம் என்பார்கள்.*

*2.முன்பிருந்த ஆலயம் முற்றிலும் அழிந்து விட்டால் அந்த இடத்தில் மீண்டும் கோவிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்வார்கள். இதற்கு ஆவர்த்தனம் என்று பெயர்.*

*3.சில சமயம் ஆலயங்களுக்குள் கொலை, கொள்ளை போன்றவை நடந்து விட்டால் அது தீட்டாகக் கருதப் படும். அவற்றுக்குப் பரிகாரம் செய்து ஆலயத்தை தூய்மைப்படுத்த கும்பாபிஷேகம் நடத்துவார்கள். இதற்கு "அந்தரிதம்" என்று பெயர்.*

*4.பழைமையான ஆலயங்களில் ஆகம விதிப்படி 6 கால பூஜை, உற்சவங்கள் நடைபெறும். இதனால் ஆலயத்தில் திருத்த வேலைகள் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.*

*அச்சமயத்தில் மூலமூர்த்தியைப் பாலா லயம் செய்து வேறு இடத்தில் வைத்து விடுவார்கள். பிறகு கட்டட குறைபாடுகளை சரி செய்தும் அஷ்ட பந்தனம் செய்தும் கும்பாபிஷேகம் நடத்துவார்கள்.*

*பிறகு ஒரு மண்டலத்துக்கு நித்ய பூஜை சிறப்பாக நடத்தப்படும். இதற்குப் புனராவர்த்தனம் என்று சொல்வார்கள். மகா கும்பாபிஷேகம் என்றும் அழைப்பதுண்டு.*

*இந்த மகாகும்பாபிஷேகம் நமது ஆலயங்களை முழுமையான இறை சக்தியுடன் திகழச் செய்து கொண்டிருக்கிறது.*

*இதனால் சங்க காலத் தமிழர்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மகா கும்பாபிஷேகத்தை மிகவும் சிரத்தையாகச் செய்தனர்.*

*கும்பாபிஷேகத்தின் ஒவ்வொரு பணியையும் கடமையாகக் கருதாமல் கண்ணாகக் கருதி செய்தனர்.*

*இந்த மகா கும்பாபிஷேகத்தை அவர்கள் 3 மாதங்கள் வரை கூட நடத்துவதுண்டு. ஏனெனில் அந்தக் காலத்தில் மகாகும்பாபிஷேகம் 55 விதமான கிரியைகளைக் கொண்டிருந்தது. (தொடரும்)*

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 1000 |
| தக்காளி | 160 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 70 | 500 |
| கோவா | 80 | 100 | 100 | 100 |
| கரட் | 150 | 260 | 280 | 280 |
| பூசணி | 160 | 160 | 140 | 160 |
| புடோல் | 180 | 220 | 200 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 500 | 600 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 350 | 350 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 280 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 300 | 280 | 240 |
| லீக்ஸ் | 100 | 160 | 150 | 160 |
| பீற்றூட் | 200 | --- | 280 | 280 |
| கறிமிளகாய் | 300 | 350 | 300 | 450 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 180 | 150 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 400 | 400 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 80-90 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 280 | 400 |
| முள்ளங்கி | 100 | 180 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 120 | 20 | 30 |
| ஈரப்பலா | 140 | 120 | 80 | 80 |



# சிறுவர் அரங்கம்

## எறும்புக்குப் பயந்த அரசர்



கடியூர் நாட்டு அரசர், போர் என்று கேட்டாலே பயந்து நடுங்குபவர். இதுவரை, ஒரு நாள்கூட அவர் வாளெடுத்து வீசியதில்லை. ஈட்டி, கேடயம் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது.

எறும்பு கடிக்கே பயந்தவர் என்றால்பாருங்களேன். அரண்மனைக்குள் ஒரு எறும்பைப் பார்த்து விட்டால் போதும். காவலனைக்கூப்பிட்டுக்கேள்வி மேல் கேள்வி கேட்பார்.

"யாரங்கே? எறும்புக்குப் பதிலாக, உன்னைக் கீழே படுக்க வைத்து நசுக்கி விடுவேன்" என்று மிரட்டுவார். எறும்புகளைச் சித்திரவதை செய்து, உடனடியாகக் கொல்லச்சொல்லிக் கட்டளையிடுவார்.

இல்லையேல், காவ லனை வேலையை விட்டு அனுப்பி விடுவார். கடியூர் நாட்டு மன்னனின் இந்த இழிவான செயலைக் கண்டு, எறும்புகள் எதிர்த்து நிற்க விரும்பின.

ஒருநாள் அவை ஒன்று கூடித், தங்களது ராணியிடம் புகார் செய்தன.

மறுநாள், எறும்புராணி தலைமையில் இலட்சக் கணக்கான எறும்புகள் அரண்மனைக்குப் படையெடுத்து வந்தன. சாரை சாரையாக வந்த எறும்புக் கூட்டத்தைப் பார்த்து, காவலர்கள் பதறி னார்கள். கோட்டையின் வாயிலை மூடி வைத்தார்கள்.

கதவுக்குக் கீழிருந்த சந்து வழியாக எறும்புகள் கோட்டைக்குள் நுழைந்தன. அவை படை வீரர்களைப் போல அணிவகுத்து நின்றன. அங்கிருந்த காவலர்களைக் கடித்து வைத்தன. அரசனுக்கு அடங்காத கோபம்.

பாதாள அறை சிங்கத்துக்கு எறும்புகளை இரையாக்கச் சொன்னார். எறும்புகளை மண்வாரியால் அள்ளி, காவலர்கள் சிங்கத்தின் கூண்டில் வீசினர். எறும்புகள், சிங்கத்தை மொய்த்துக் கடித்தன. சிங்கத்தைச் சாகடித்தன. அடுத்ததாகப் பட்டத்து யானைகளை அரசர் அவிழ்த்துவிடச் சொன்னார். எறும்புக் கடி தாங்காமல் பட்டத்து யானைகள் பிளிறி ஓடின.

எறும்புகளைக் கொல்ல மந்திரிகள் ஒன்றுகூடிச் சென்றார்கள். எறும்புகள் மந்திரிகளைக் கடித்து வைத்தன. அதைப் பார்த்து அச்சப்பட்ட அரசர், அரண்மனைக்குள் கட்டிய தெப்பத்தில் குதித்தார். இடுப்பளவு தண்ணீர் இருந்த இடம் பார்த்துப் பாதுகாப்பாக நின்றுகொண்டார். (தொடரும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## (103) காதலும் கனவும்



சொத்துக்கள் எல்லாவற்றையும் நெருப்பு சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்தார் அலெக்சாண்டர்.

ஆனால் மற்றவீரர்களுக்கு உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்தது. அலெக்சாண்டர் சொன்னார்.

மாண்புக்குரிய வீரர்களே, விலைமதிப்பு மிகுந்த பொருட்கள் எல்லாம் நம் கண்முன்னால் எரிந்து சாம்பலாகியிருக்கின்றன.

நீங்கள் இந்தியாவில் பெறப்போகும் செல்வங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவை எல்லாம் வெகு அற்பமானவை.

நாம் அடுத்துச் செல்ல இருப்பது சொர்க்கபூமிக்கு. மாணிக்கங்களாலும் வைர வைடூரியங்களாலும் நிறைந்த இந்தியாவுக்கு.

வீரர்களுக்கு இப்போது தான் நெருப்பு வைத்ததற்கான அர்த்தம் புரிந்தது. சோகம் கலைந்தது. உற்சாகம் தொற்றிக் கொண்டது.

எத்தனை சேதங்கள் வந்தாலும் சரி, பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் சரி, தடைகள் வந்தாலும் சரி. எல்லாவற்றையும் தீரத்துடன் எதிர்கொண்டு இந்தியாவைக் கைப்பற்றியே தீருவேன்.

இதில் மாற்றமே இல்லை. உங்கள் உழைப்பும் உதவியும் இருந்தால் எல்லாமே எனக்கு சாத்தியம். உறுதியாகப் பேசினார் அலெக்சாண்டர்.

இந்தியா புதிய தேசம். அதிகம் அறிந்திராத தேசம். அரசியல் சூழல். தட்பவெப்பச் சூழல். எதுவுமே தெரியாமல் யுத்தத்திற்குக் கிளம்புவது ஆபத்து என்பது அலெக்சாண்டருக்குத் தெளிவாகப் புரிந்திருந்தது.

உடனடியாக அரசியல் வல்லுநர் மற்றும் வரலாற்று ஆசிரியர்களை அழைத்து வாருங்கள்.

இந்தியாவின் ஒவ்வொரு அங்குலத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். உத்தர விட்டார் அலெக்சாண்டர்.

தெரிந்துகொண்டார். வரைபடத்தை வைத்துக் கொண்டு தன்னுடைய எல்லாச் சந்தேகங்களுக்கும் விடை தேடும் முயற்சியில் ஈடுபட்டார். இறுதியாகச் சொன்னார்.

இந்தியாவில் பிரிவினை தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. வெற்றி சாத்தியம்தான். (தொடரும்)

கெட்ட நடவடிக்கைகள் ஆரம்பத்தில் இன்பமாக இருந்தாலும் கடைசியில் கொடுந் துன்பக் காட்டுக்குத்தான் அழைத்துச் செல்லும். - *கவி தாம்ஸன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிகார வெறியில் அதர்மம் செய்கின்றீர்

துரியோதனன் தலைமையிலான கௌரவர் தரப்பின் அதி உச்ச கொடுமை எதுவெனில், அரச சபைதனில் வைத்து திரௌபதியை மானபங்கப்படுத்தியமையாகும்.

பாண்டவர்களைத் துன்புறுத்தியபோதெல்லாம் பொறுமை காத்த ஆபத்பாந்தவனாகிய கிருஷ்ண பரமாத்மா திரௌபதிக்கு நடந்த அநீதி கண்டு இனியும்தான் அமைதி காப்பது அறமல்ல என்று முடிவெடுத்தான்.

அன்று கௌரவர் சபையில் திரௌபதியின் மானம் காத்த கண்ணன் இனி காரியம் முடிப்பேன் என்பதை சூக்குமமாக உணர்த்தியிருந்தான் என்பதே உண்மை.

எனினும் அந்த உண்மையை உணர்ந்து கொள்கின்ற நிலைமையில் துரியோதனன் தரப்பு இருந்திருக்கவில்லை.

அதேநேரம் அரச சபைதனில் வைத்து தன் துகில் களையப்பட்ட கொடுமையும் அந்தக் கொடுமையைத் தடுத்து தன் மானம் காத்த கண்ணனின் துணையும் இருப்பதை உய்த்தறிந்த திரௌபதி; ஆன்றோரும் சான்றோரும் மிகுந்த அச்சபைதனில்,

கௌரவர் குருதி பூசி என் கூந்தல் முடிப்பேன் எனத் தலைவிரி கோலத்தில் நின்று சத்தியம் செய்தாள்.

அச்சத்தியம் குருஷேத்திரத்தில் நிறைவேற வேண்டியதாயிற்று.

ஆம், 18 நாள் குருஷேத்திரப் போரில் கௌரவர் சேனை மாண்டு போனது.

அதர்மம் முற்றியபோது தர்மத்தைக் காப்பாற்றும் தம் கடனை அவதாரக் கடவுள் செய்து முடிப்பார்.

இதுவே இயற்கையும் இறை நியதியுமாகும்.

ஆம், இலங்கையில் இப்போது அதர்மம் உச்சத்துக்கு வந்துவிட்டது. புத்தபிரானை சாட்டாக வைத்து தமிழரின் பூர்வீக நிலம் கபளீகரம் செய்யப்படுகிறது.

புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, புத்தபிரானை வைத்து அதர்மம் செய்யப்படுகிறது எனில், அதனை போதிமாதவன் ஒருபோதும் அனுமதிக்கமாட்டான்.

அப்பாவித் தமிழ் மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்து, காங்கேசன்துறையில் நூறு அடி உயரத்தில் பௌத்த விகாரைக்குரியதான தாதுகோபுரத்தை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த அடிக்கல்லை இந்த நாட்டின் இராணுவத் தளபதி நாட்டியுள்ளார்.

அப்படியானால், இலங்கையின் இராணுவத் தளபதி தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற பொறுப்பில் இருந்து விலகி விட்டாரா? அல்லது அவர் பௌத்த சிங்களவர்களின் இராணுவத் தளபதியா? என்ற ஐயப்பாடுகள் எழவே செய்யும்.

எது எவ்வாறாயினும் நூறு அடி உயரத்தில் அமைக்கப்படும் பௌத்த விகாரை புத்தபிரானுக்கானதல்ல என்பதும் அது தமிழர்களின் இடத்தைக் கபளீகரம் செய்வதற்கானது என்பதுமே நிஜம்.

ஆக, இந்த உச்சமான அதர்மம் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஈனமாக அமையும் என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறமுடியும்.

# அதிகாரம் கையிலிருக்கும் போதே சிந்தித்துச் செயற்படுங்கள்

### சிங்கள ராவய

(கொழும்பு)

நாட்டு மக்கள், துறைமுக தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பலரதும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கொழும்பு துறைமுகத்தின்கிழக்குமுனையம் இந்தியாவிற்கு வழங்கப்படுமானால் அது நாட்டின் இறையாண்மைக்கும் சுயாதீனத் தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இவ்வாறு தேசிய சொத்துக்களை விற்பதற்காக இந்த அரசாங்கத்திடம் மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை என்று சிங்கள ராவய அமைப்பின் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய சொத்துக்களை விற்பதற்கு அரசாங்கத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது. கிழக்கு முனையம் அரசாங்கத்திடமிருந்து கைநழுவிப் போகுமானால் அது நாட்டுக்கு பாரிய நெருக்கடியாகும்.

நாட்டின் பொருளாதாரம், சுயாதீனத்தன்மை என்பவற்றுக்கு ஏற்படும் அச்சுறுத்தலுமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பௌத்த தேரர்களும் மக்களும் இணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் ஆட்சிக்கு கொண்டு வரவில்லை.

எனினும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் தற்போது தரை மட்டமாக்கப்பட்டுள்ளன.

அரசியல் வாதிகளுக்கு பதிலாக வர்த்தகர்கள் நாட்டை ஆட்சி செய்யும் நிலை தோன்றியுள்ளது.

அரசாங்கமும், குறித்த வர்த்தகர்களும், ஜனாதிபதிக்கு தெரியாமல் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்களா? அல்லது ஜனாதிபதிக்கு தெரிந்தே இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

அதிகாரம் கைநழுவிச் சென்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று தனிமையடைந்த பின்னர் இவை பற்றி சிந்திப்பது பிரயோசனமற்றது.

எனவே அதிகாரம் கைகளிலிருக்கும்போதே சிந்தித்துச் செயற்படுமாறு ஜனாதிபதியை வலியுறுத்து கின்றோம்.

நாட்டு மக்களுக்கு மாற்று வழியொன்று இல்லாததன் காரணமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதிகாரத்தை வழங்கினார்கள்.

எனவே மந்தமாக செயற்படாமல் இவ்விடயத்தில் துரிதமாக செயற்படுமாறு கோருகின்றோம் எனத் தேரர் வலியுறுத்தினார். (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** இணுவில் கந்தசாமி கோவில், இணுவில் மேற்கு, பாலாவோடை, பெரியபொக்கணை, வாதரவத்தை, பத்தானை, தாவடி மானிப்பாய் வீதி, தாவடி இந்துமயானம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிப் பிலவு, செல்வநகர், சமணன்குளம் கிராமம், புதியசின்னக்குளம் கிராமம், வீரபுரம், சின்னசிப்பிக்குளம், ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** பாலக்குழி பிரதேசம், தந்திரி மலை, N.W.Steel PVT ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நிர்வாக சேவை பரீட்சை பெறுபேறுகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

அரச பொது நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டி பரீட்சையின் பெறுபேறுகள், அரச சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெரிவுகள் இடம்பெற்ற பின்னர் பரீட்சை பெறுபேறுகளை பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பீ. பூஜித தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# பண்பாடு



நான் உலகம் முழுவதும் சென்று பல நாட்டு மக்களைக் கண்டிருக்கிறேன். பல நாட்டுப் பெண்மணிகளை நான் கண்டு அவர்களுடைய பண்பாட்டினுடைய அடிப்படை எல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். ஏனென்றால், எனக்குப் பண்பாட்டின் மேல் அதிகமாகப் பற்றுதல் உண்டு.

பண்பாடு என்றால் என்ன? இந்த உலகம் தோன்றி ஆரம்ப காலத்தில் ஆதி மனிதன் **(Primitive man)** என்று சொல்வார்களே, அந்த நிலையிலேயிருந்து இன்று வரை பார்ப்போம். எத்தனையோ மாறுதல்கள் மனித சமுதாயத்திலே வந்து இருக்கின்றன.

அவையெல்லாம் அந்தந்த இடத்திலே, அந்தந்தக் காலத்திலே அங்கங்கு கிடைத்த உணவுப் பொருட்கள், ஆங்காங்கு இருந்த தொழில்வசதி, அதைக் கொண்டு உற்பத்திச் சிக்கல்கள், அதனால் ஏற்பட்ட நோய், அதைப் போக்கிக் கொண்ட முறைகள் இவையெல்லாம் ஒவ்வொரு நாட்டிலேயும் தாமாகவே பரிணாமத்தில் **Cultural evolution-process** என்பதாக வந்து கொண்டே இருக்கும்.

ஆகவே, ஒரு மனிதன் ஒரு இடத்தில், ஒரு குருவினிடத்தில், ஒரு நாட்டில், ஒரு பண்பாடு இருக்கிறது என்றால் அதை நோக்கிப் பார்த்தோமேயானால் நீண்டகாலச் சரித்திரத் தொடராகத் தான் அது இருக்கும். ஆகவே, பண்பாட்டுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

# பிளாஸ்ரிக் பொருட்களுக்கான தடை வெளியானது வர்த்தமானி அறிவித்தல்



(கொழும்பு)

ஒரு தடவை மற்றும் குறுகிய காலத்திற்கு பாவனைக் குட்படுத்தும் பிளாஸ்ரிக் பொருட்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல் தடை செய்யப்படவுள்ளன.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, 20 மில்லி மீற்றர் அல்லது 20 கிராம் நிறைக்கு குறைவான சிறிய பைகள், காற்றடைக்கப்படக் கூடிய விளையாட்டுப் பொருட்கள், பிளாஸ்ரிக் காம்புகளுடனான கொட்டன் பட்ஸ் ஆகியன குறித்த திகதிகளில் இருந்து தடை செய்யப்படவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கிழக்கு முனையத்தை ஒருபோதும் விற்க மாட்டோம்- பிரதமர் உறுதி

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ அரசாங்கம் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலையில் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குறித்து ஒரு பிரச்சினை எழுந்துள்ளது. மற்றும் எதிர்க்கட்சி தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறதே என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த பிரதமர், "நிச்சயமாக, எதிர்க்கட்சியை குறைகூற எதுவும் இல்லை. நாங்கள் அதை யாருக்கும் கொடுக்க மாட்டோம். இது விற்கப்படவில்லை அல்லது குத்தகைக்கு விடப்படவில்லை. அது எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. தொழிற்சங்கங்களுக்கும் அது தெரியும் என்று நினைக்கிறேன். நாங்கள் அதைப் பற்றி விவாதிக்கவில்லை.

எனவே இது ஒரு பிரச்சினையாக இருக்காது. வேலை நிறுத்தம் செய்ய எதுவும் இல்லை. நீங்கள் வந்து என்னிடம் சொன்னால் நான் உண்மையிலேயே அது தொடர்பில் விளக்குவேன். அமைச்சரவையில் 99 சதவீதம் பேர் அதை விற்கக்கூடாது என்று கருதுகின்றனர். இந்த இரண்டையும் விற்பனை செய்வது எங்கள் கொள்கை அல்ல. அது ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல எங்களுக்கு அதிகாரம் இல்லை" என அவர் தெரிவித்தார். (நி-4)

## வெளிவாரி மருந்தாளர்களை உருவாக்க அரும்பணியாற்றியவர்

# அமரர் மருத்துவர் சிவாஞானபண்டிதன்

### மறைந்தார் மாண்பு



டாக்டர். சிவாஞானபண்டிதன் வெளிவாரி மருந்தியலாளர்கள் கற்கைநெறிக்கு **Sri Lanka Medical Council** திணைக்களத்தில் மாணவர்களைப் பதிவு செய்து கல்வியூட்டுவதற்காக **Pharmed Academy** என்ற பெயரில் **Muthuval, Silave Island, Kandy, Jaffna** ஆகிய ஊர்களில் நிறுவினார்.

மேற்படி கல்வி கற்ற மாணவர்களில் நூற்றுக் கணக்கானவர்கள் வெளிவாரி மருந்தியலாளர்கள் பட்டம் பெற்றுள்ளனர். அவர்களில் சிலர் இலங்கை முழுவதும் மருந்தகங்களை நிறுவி மக்களுக்குச் சேவையாற்றுகின்றனர். சிலர் மருந்தகங்களில் பணிபுரிகின்றனர் சிலர் மருத்துவப் பிரதிநிதிகளாகத் தொழில் புரிகின்றனர்.

சிலர் வெளிநாடுகளில் உயர் பதவிகளில் உள்ளனர். ஆங்கிலப் புலமை பேச்சு வல்லமையும் உள்ளவர்கள் டாக்டர். சிவாஞானபண்டிதன் காலத்திலேயே பல இடங்களில் வெளிவாரி மருந்தியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

டாக்டர். சிவாஞானபண்டிதன் கல்வியூட்டிய வெளிவாரி மருந்தியலாளர்கள் அவரின் பணியை மென்மேலும் வளர்த்து மருந்தியலாளர்களின் அரசன்தான் என்பதை உறுதி செய்வார்கள்.

1983-1984 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள **Dr. Philips Nursing Home** நிறுவனத்தின் முன்பாக உள்ள வீட்டில் வெளிவாரி மருந்தியலாளர்களின் கற்கைநெறி ஞாயிறு தினங்களில் நடைபெற்றது.

டாக்டர். சிவா சனி இரவில் கொழும்பு- யாழ்ப்பாணம் பேருந்தில் புறப்பட்டு ஞாயிறு காலை யாழ்ப்பாணம் வந்து கல்வியூட்டினார். ஒருநாள் பேருந்தை தவறவிட்டு விட்டார். தன்து உந்துருளியில் கொழும்பில் இருந்து புறப்பட்டு காலை 7.30 மணிக்கு **Dr.Phlips Nursing Home** ஐ வந்தடைந்தார். பிரதான வீதியில் உள்ள நீர்க்குழா யில் கால் முகம் கழுவி விட்டு வகுப்பை ஆரம்பித்தார் **Dr. Siva Duty is Wors hip** என்பதை நிருபித்த மனிதன்.

மலையக மக்களின் மருத்துவ சேவைக்காக மருந்தியலாளர் பட்டம் பெற்றவர்களை உயர்கல்வியூட்டி தோட்ட மருத்துவ உதவியாளர் **(E.M.A)** பதவியை உருவாக்கிய மருத்துவப் பேரரசான்.

இவர் உருவாக்கிய **E.M.A** பதவி வகித்தவர்கள் மலையக மக்களுக்கு அந்தந்த தோட்டங்களில் அரும் பெரும் சேவையாற்றினர்.

அவரிடம் பணிபுரிபவர்கள் தவறு செய்தால் வயது, தகுதி, அந்தஸ்து என்பன பார்க்கமாட்டார் தண்டனை கொடுப்பார்.

அமரர் டாக்டர். சிவாஞான பண்டிதன் மருத்துவப் பேரரசன், மருந்தியலாளர் களின் அரசன் என்பதனை முரசொலித்து அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குழைக்காட்டார்

# நீதிமன்ற அதிகாரங்களை நிறைவேற்றதிகாரம் கையகப்படுத்தியுள்ளது- எரான் விக்கிரமரத்ன

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினூடாக நீதிமன்றத்தின் அதிகாரங்கள் நிறைவேற்றுத்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளன.

உண்மைகளை கண்டறிவதற்காக விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக் குழுக்களால் தீர்ப்பளிக்கவோ தண்டனை வழங்கவோ முடியாது.

அவை நீதிமன்றத்திற்குரிய பொறுப்புக்களாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிர மரத்ன தெரிவித்தார். (நி-4)

# வேங்கையை வீழ்த்தியது சுண்டுக்குளி ஈகிள்ஸ்




ஆட்ட நாயகன்



சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி




அணித் தலைவர்

விஜியரட்ணம் ஞாபகார்த்த ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணம் -2021 தொடருக்கான முதலாவது தகுதிகாண் போட்டி சுண்டுக்குளி ஈகிள்ஸ் , வடமராட்சி வேங்கைகள் அணிக்கிடையே நேற்று முன்தினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி வேங்கைகள் அணி 18.1 ஓவர்களில் 10விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களை பெற்றது.

போட்டியில் பியற்றிக் 17, மோகன்ராஜ்-14, சுஜீபன்-13 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணியின் பிரிந்தாபன்-3, யதுசன்-2, அபிநாஸ்-2, கஜானன்-3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

72 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணி 19.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியில் அபிநாஸ் ஆட்டமிழக்காது 19 ஓட்டங்கள், ஜனார்த்தனன் 18 ஓட்டங்கள், யதுஸன் 12 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் வடமராட்சி வேங்கைகள் அணியின் சாம்பவன்-2, ருக்ஸ்மன்-1, மதுஸன்-1, மோகன்ராஜ்-1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக அபிநாஸ் தெரிவு செய்யப்பட்டார். போட்டியில் வெற்றி பெற்றமைக்காக சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணிக்கு 2500 ரூபாய் பணப்பரிசு வழங்கப்பட்டது. (4)

## விபத்தில் படுகாய...

ளார்.

கடந்த 18 ஆம் திகதி செட்டிகுளம் நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர் வீதியைக் கடக்க முற்பட்டபோது மதவாச்சியில் இருந்து மன்னார் பகுதி நோக்கி சென்ற டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளிற்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் செல்லப்பன் ராஜ்குமார் (வயது - 54) என்ற நபரே உயிரிழந்தவராவார். (ஞா-299)

## கடந்த 3 நாட்...

கணக்கில் அதிகரித்து வருகிறது.

ஒரு வருடத்தில் சுமார் 60,000 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் ஜனவரி 29 ஆம் திகதி முதல் இலங்கையில் கோவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய முதல் நாளான ஜனவரி 29 ஆம் திகதி 5286 பேருக்கும் இரண்டாம் நாளான 30ஆம் திகதி சனிக்கிழமை 32,539 பேருக்கும் ஒட்டுமொத்தமாக 37,825 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஞா)

## 1530 பேருக்கு...

தினம் வடக்கு மாகாணத்தில் 1530 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 875 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 200 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 210 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 145 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 100 பேருக்கும் இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது. (ஞா)

## குருந்தூர்மலை...

பது தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு குருந்தூர்மலை மற்றும் படலைக்கல்லு ஆகிய பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் முன்னெடுப்பதற்கான பூர்வாங்க செயற்பாடுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அங்கு தமிழ் மக்களின் பூர்வீக அடையாளங்கள் அழிக்கப்பட்டதாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

அத்துடன் தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் விகாரை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அபாய முள்ளதாக சந்தேகங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளின்போது யாழ்.பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த துறைசார்ந்தவர்களையும் இணைத்துக் கொள்ளுமாறு தமிழ் அரசியல், சிவில் பிரதிநிதிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று திங்கட்கிழமை, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தலைமையில் தொல்லியல்துறை அதிகாரிகள் கலந்து கொள்ளும் முக்கிய கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. (ஞா)

## புதிய ஆணைக்...

வரையிலான காலப்பகுதிவரை அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட அரச ஊழியர் தொடர்பில் விசாரணை மேற் கொள்ள ஜனாதிபதி, விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

இது தொடர்பான சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் இந்த சிறப்பு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகளான தம்மிக பிரியந்த சமரகூன் ஜெயவர்தன, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் நீதிபதி ரத்னபிரிய குருசிங்க ஆகியோரே நியமிக்கப்பட்டவர்களாவர். (ஞா)

## இலங்கையின்...

அறிக்கைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நீதிபதி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு வரையிலான உள்ளக செயற்பாடுகளை குறிப்பிட்டுக் கூறும் புதிய பிரேரணையொன்றே தற்சூழலில் அவசியமாக உள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர், இலங்கை தொடர்பான மீளாய்வு அறிக்கையை சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டிருக்கின்றார்.

இதனை எதிர்வரும் 24ஆம் திகதியன்று ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த நிலையில் அவர் இம்முறை வெளியிட்டுள்ள அறிக்கையில் முதலில் சிவில் நிர்வாகத்தில் 28 படை அதிகாரங்களை இணைத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பில் கூறியிருக்கின்றார்.

அத்துடன், 20ஆவது திருத்தச் சட்டத்தினால் ஏற்பட்டுள்ள அதிகாரக் குவிப்பு மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமல் போனமை, அரசியலமைப்பில் உள்ள உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளமை, இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30.1 தீர்மானம் நடைமுறைப் படுத்தப்படாமை, விசேடமாக கலப்புபொறிமுறையுடனான நீதி விசாரணை முன்னெடுக்கப்படாமை, ஆகியவற்றையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவற்றில் இலங்கை விடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். (ஞா)

## உருத்திரபுரத்தில்...

அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் திணைக்களத்தினர் அண்மையில் குறிப்பிட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துவந்த நிலையில் நேற்றையதினம் அப்பகுதிக்கு பௌத்த தேரர் ஒருவர் வந்து சென்றுள்ளார்.

அவர் வந்து சென்ற சில மணித்தியாலங்களின் பின்னர் அப்பகுதிக்கு பொலிஸார் வந்ததாகவும் பின்னர் மாலை வேளையில் இராணுவத்தினர் வந்து அவ்விடத்தை பார்த்து சென்றதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அப்பகுதியில் பரபரப்பான நிலை காணப்பட்டது. ஏற்கெனவே தொல்லியல் திணைக்களத்தால் அப்பகுதிஅடையாளம் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா-100)

## 837...

யாகியுள்ளது.

இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் கோவிட் - 19 தொற்றுறுதியானவர்களின்மொத்த எண்ணிக்கை 64 ஆயிரத்து 130 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 3...

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 316 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## வடக்கில் நேற்...

டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அந்தவகையில், யாழ்.மாவட்டத்தில் ஒருவருக்கும் மன்னார் மாவட்டத்தில் இருவருக்கும் மற்றும் வெள்ளாங்குளம் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 10 பேருக்கும் தம்பகோஎட்டினம் தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் கோப்பாய் சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஞா-18)

## இராணுவம்...

மாலை சென்று பார்வையிட்டுள்ளனர்.

குறித்த மலைப் அடிவாரப் பகுதியில் பொலிஸார், படையினர் கடமைகளில் நின்றபோதும் எந்தவித தடையும் இன்றி தேரர்கள் மலைக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை அங்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களுக்கான அனுமதி பொலிஸாரால் மறுக்கப்பட்டுள்ளதுடன் ஊடகவியலாளர்கள் பதிவிற்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்கள். (ஞா-281)

## இளைஞன்...

முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கடந்த 28ஆம் திகதி தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய நிலையில் தீக்காயத்துக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த 33 வயதுடைய கோபாலசுந்தரம் கவிதாஸ் என்ற இளைஞர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1659 திகதி 2021.01.31
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 13 34 47 59

மெகா பவர்
திகதி 31/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0751
P 09 11 38 61 65

மஹஜன சம்பத
திகதி 2021/01/31
சீட்டிழுப்பு இலக்கம் 4384
W 6 7 8 3 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 31.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2679
P 20 22 38 41

தன நிதானய
திகதி - 2021.01.31
சீட்டிழுப்பு இலக்கம் - 421
E 22 26 36 55

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1180
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 31.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 103,862,570
வெற்றி இலக்கங்கள் 27 33 35 36 E

சனிதா
சீட்டிழுப்பு இல: 3510
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 31.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,456,084
வெற்றி இலக்கங்கள் 58 69 70 75 G

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,173,002/=
வெற்றி இலக்கங்கள் 03 12 14 36 தனுசு
திகதி : 31.01.2021
வெற்றி வாரம் : 3061
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,411,600

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1354 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 31/01/2021 தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் D 06 28 30 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் 66,207,961/=

ஜயோதா
684
மஞ்சள்
31.01 2021
U 10 29 49 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,490,110
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய சூழலில் அமைக்கப்படும் முதியோர் ஆச்சிரமம்

## பங்குனி மாதம் திறக்கப்படும்

### கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

(குப்பிழான்)

தொல்புரம் முதியோர் இல்லத்தில் தற்போது 80 பேர் வரையான முதியோர்கள் தங்கியுள்ள நிலையில் சுகாதாரத் திணைக்களத்தினர் இனிஅங்கே அறைகள் கட்ட வேண்டாம் எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்நிலையில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் மேற்கு வீதியில் முன்னாள் அதிபர் கிருஷ்ணபிள்ளையின் குடும்பத்தினர் வழங்கிய காணியில் தற்போது முதியோர் ஆச்சிரமம் அமைத்து வருகிறோம் என சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், ஆன்மீகச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

பழம்பெரும் கிராமமான மயிலிட்டியில் ஆதி மயிலிட்டி எனும்பகுதியில் சிவபூமி அறக்கட்டளையினரால் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி கந்தபுராண ஆச்சிரமம் மற்றும் அதனுடன் இணைந்தவகையில் அமைக்கப்பட்டுள்ள அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் என்பன தைப்பூச நாளான கடந்த வியாழக்கிழமை முற்பகல் திறந்து வைக்கப்பட்டன.

மேற்படி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பங்குனி மாதம் 12 அறைகளுடன் அமைக்கப்பட்டு வரும் முதியோர் ஆச்சிரமத்தின் பணிகள் நிறைவு பெற்றுத் திறக்கப்படவுள்ளது. இந்த முதியோர் ஆச்சிரமத் திறப்பு விழாவை சுமுகமானதொரு சூழலில் அனை வரையும் அழைத்து நிகழ்த்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

ஆச்சிரமத்தின் 12 அறைகளையும் அமைப்பதற்கு 12 குடும்பத்தவர்கள் நிதி உதவி வழங்குகிறார்கள். புதிதாக கீரிமலையில் அமைக்கப்பட்டு வரும் ஆச்சிரமத்தில் நடமாடக் கூடிய முதியவர்களைத்தான் தாங்க வைப்பதற்கு முடிவு செய்துள்ளோம். அவர்கள் நோய் வாய்ப்படும் காலப் பகுதியில் மீண்டும் தொல்புரத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஞா-18)

# பொதுச் சுகாதாரத்தில் அச்சுறுத்தல் நிலவுகிறது

### ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமல் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறது. எதிர்காலத்தில் தோன்றவுள்ள உயிரியல் போரில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் தற்போது சிறந்த கொள்கைகளை வகுக்க வேண்டும்.

தடுப்பூசிகளை பெறும் பொறுப்பினை சுகாதார வைத்திய நிபணர்களுக்கு வழங்குவது சிறந்ததாகும். பிற துறைசார் நிபுணர்கள் சுகாதார விடயத்தில் தலையிடுவது ஏற்புடையதல்ல என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். (ஞா)

# சட்ட சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும்

### பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இளைஞர்க்ள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைக்கப்படுவார்கள்.

போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்களை சிறைச்சாலைகளில் தடுத்து வைப்பதற்கு பதிலாக, அவர்களை புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்புவதற்கான சட்ட சீர்திருத்தங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

நிட்டம்புவ பிரதேசத்தில் உள்ள சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மையத்தின் அங்குரார்பண நிகழ்வின்போது இதனைத் தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் மேலும் கூறுகையில்,

ஒரு போதைப்பொருளற்ற நாடாக முன்னோக்கி செல்வது இலேசான பாதையாக அமையப்போவதில்லை. போதைப் பொருளுக்கு அடிமையான அவர்களுக்கு புனர் வாழ் வளிக்க இதுபோன்ற எட்டு கட்டடத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட உள்ளன.

இந்த கட்டடத்தொகுதிகளின் நிர்மாணப் பணிகளுக்கு முப்படைகளிலிருந்து படை வீரர்கள் ஆளணியினராக செயற்படுத்தப்படுவார்கள். இவற்றினூடாக ஒரே சந்தர்ப்பத்தில் 60 கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை மீண்டும்சமூகத்துடன் இணைத்துக்கொள்ள முடியும்.2000 கைதிகளை பராமரிக்க தேவையான வசதிகளுடன் கூடிய 20 கட்டடங்களை வீரவில பகுதியில் நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் போதைப்பொருள் அச்சுறுத்தல் முற்றாக இல்லாதொழிக்கப்படும்.

மோசமான பாதாள உலக செயற்பாட்டாளர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் சட்டவிரோதமாக ஒரு சில அதிகாரிகளுடன் தொடர்புகளைப் பேணியதால் அதிகபட்ச பாதுகாப்பான சிறைச்சாலைகளை நாம் உருவாக்கியுள்ளோம் என்றார். (ஞா)


**பணியாளர்கள் தேவை**

வடமாகாணத்தில் இயங்கும் பிரபல ஸ்தாபனத்திற்கு பணியாளர்கள் தேவை.

**18 - 32 வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகைமை : O/L சித்தி, A/L படித்திருத்தல் வேண்டும். அனுபவம் அவசியமற்றது.**

February 01 - 04 ஆம் திகதி வரை அனுமதி உண்டு. (5492)

யாழ்ப்பாணம் - 076 808 2241

மன்னார் - 077 230 2795 (10ஆம் தரம் படித்தவர்களுக்கும் வாய்ப்பு உண்டு)

**கட்டடம் வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி சந்திரச்சந்திக்கு அருகாமையில் கீழ் தளத்தில் ஒரு கடையும் 1ஆம் மாடியில் 2 கடைகளும் 2ஆம் மாடியில் 2 கடைகளும் சகல வசதிகளுடன் உண்டு.

(தனியார் கல்வி நிலையம், நிறுவனங்கள், களஞ்சியசாலை வியாபார நிலையத்துக்கும் ஏற்றது.)

தொடர்பு:- குரு (5493)

077 805 1655

077 596 3845

மீண்டும்



**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்

**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-1185)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536



**A/L - 2021 - தமிழ் மீட்டல் வகுப்பு**

**பா. பத்மநாதன்**

B.A (Hons) ( Tamil Spl. ) -1st Class

M.A (Tamil) - 1st Class

M.Ed. (Hons) - 1st Class

Dip. in. Ed.

(வெளி மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்) (5491)

ஆரம்பம்

C.C.A. சுன்னாகம் 04.02.2021 - 4.30p.m

சித்திவிநாயகர் - மல்லாகம் 07.02.2021 - 5.00p.m

மொடேண் - சண்டிலிப்பாய் 05.02.2021 - 4.30p.m

மகுடம் - உரும்பிராய் 06.02.2021 - 5.00p.m

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623. (5488)

**WEC நிறுவனத்தின் உடனடி வேலை வாய்ப்பு**

- நீங்கள் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் தரம் 10, O/L மற்றும் A/L படித்தவராகவும் இருந்தால் விண்ணப்பிக்க முடியும்.
- தகுதிகாண் காலத்தின் போது 15,200/- தொடக்கம் 25,800/- வரையும் பின்னர் நிரந்தர வேலை வாய்ப்பினையும் 58,400/- சம்பளத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். (5481)

**விண்ணப்பிக்கும் முடிவுத் திகதி : 20.02.2021**

வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி, உணவு வசதி இலவசம்

☎ -076 940 4151, 077 985 8580

**சாரதி தேவை**

நெல் வெட்டும் இயந்திரத்திற்கு சாரதி தேவை. (C-1321)

077 023 7391

**PHYSICS**

T.K. KAJAN B.Sc (5459)

077 653 1177

**அறைகள் வாடகைக்கு உண்டு**

பெண்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு.

இடம் : 87/6, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5487)

076 132 5353

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]

[Personal-Group-Visiting Classes] (C-1321)

2D-Drawing 3D-Modeling

**Auto CAD**

Lecturer By Mr.K.N.Muguntha n(D/A)

Cert in Auto CAD(2D Drawing&3D Modeling)

University of Peratheniya.

Cert in Auto CAD(Advance 3D Modeling)

University of Moratuwa.

Cert in Auto CAD(2D Drawing&3D Modeling)

Open University of Sri Lanka.

Cert in Auto CAD(2D &3D)(1stClass)

University of Colombo.

Link: 077-5116320 071-8617972 [Civil & Mechanical]

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-1167)

0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.